Registered as a magazine in Sri Lanka

# நிமிர்வு


ISSN 2579 - 2113

அரசியல் சமூக பொருளாதார செயற்பாட்டிதழ்

facebook.com/nimirvu youtube.com/nimirvu www.nimirvu.org

பார்வை – 50 மாசி-பங்குனி, 2022 பக்கங்கள் – 24 விலை – ரூபா 20.00

# சிறீலங்காவில் நீதியின் விலை ஒரு இலட்சம் ரூபாய்கள்



- புதிய உத்தேச அரசியல் யாப்பும் ஈழத்தமிழருக்கான அரசியல் தீர்வும்
- ஈழத் தமிழர் தேசிய இனப் பிரச்சினைக்கான தீர்வும் தேசிய, பிராந்திய, சர்வதேச நிலவரங்களும்
- அபிவிருத்தி என்பதனை எவ்வாறு கையாளப் போகின்றோம்?

ஆய்வு – அறிவு – நிமிர்வு

# அபிவிருத்தி என்பதனை எவ்வாறு கையாளப் போகின்றோம்?



**(நிமிர்வு ஐப்பசி - கார்த்திகை மாத இதழில் வெளியான கைத்தொழில்மயமாக்கம் தொடர்பிலான கட்டுரையின் இறுதிப்பகுதி இதுவாகும்)**

**இன்று** எங்களிடம் உள்ள முக்கிய தொழில்கள் விவசாயமும், கால்நடை வளர்ப்பும், மீன்பிடியும் தான். வளங்கள் கடல்வளமும், நிலவளமும், நீர்வளமும் தான். ஆனால் அவற்றின் வளர்ச்சிக்கு ஒரு எல்லை உண்டு. விவசாயத்திற்கு எப்போதும் குறைந்து செல்லும் விளைவு விதி உண்டு என பொருளாதார அறிஞர்கள் சொல்வார்கள். ஒரு கட்டத்துக்கு மேல் விவசாயம் பெரியளவில் உற்பத்தியை பெருக்காது. விவசாய பொருள்களுக்கான நிலையான விலை மற்றும் சந்தை வாய்ப்புகளும் ஒரு கட்டத்துக்கு மேல் உயர முடியாதவை. எனவே விவசாய பொருளாதாரத்தால் எங்களை விரைந்து மேல் எழுப்பி உலகத்தின் முன் நிறுத்துவதற்கான வாய்ப்புகள் இல்லை என்று தான் நான் கூறுவேன். இது தான் ஜப்பானிய வரலாறும் கூட. இஸ்ரேல் என்கிற நாட்டை யூதர்கள் கட்டமைக்கும் போது தங்களை விரைந்து உலகின் முன் நிறுத்துவதற்கு அவர்கள் கைத்தொழிலை முதன்மையான ஒரு விடயமாக எடுத்தார்கள். மலேசியாவில் இருந்து சிங்கப்பூர் பிரிந்த போது சிங்கப்பூரின் தந்தை என போற்றப்படும் லீகுவான் யூ கையில் எடுத்த ஆயுதம் கைத்தொழில். ஆனால் நாங்கள் இன்னமும் அந்தப் பக்கத்தை பார்க்கவில்லை. எத்தகைய கைத்தொழில்கள் வர வேண்டும், எவ்வாறு அவற்றை நாங்கள் உருவாக்க வேண்டும், எவ்வாறு அதன் மூலம் எங்களுடைய பொருளாதாரத்தின் தாங்குதிறனை அல்லது எங்களை காவிச் செல்லுகின்ற ஆற்றலை அதிகரித்துக் கொள்ள முடியும், என்கிற விடயங்களை நாங்கள் ஆழமாக ஆய்வு செய்ய வேண்டும்.

அண்மைக் காலத்தில் எங்களுடைய அரசியற் தலைவர்கள் பல்வேறு வெளிநாட்டு இராஜதந்திரிகளை சந்தித்தார்கள். அப்போது அவர்களுக்கு சொல்லப்பட்ட செய்தி அரசியற் தீர்வும் வேண்டும். அதே நேரம் அபிவிருத்தி குறித்தும் நீங்கள் சிந்திக்க வேண்டும் என்பதே. ஆனால், எவ்வாறு அபிவிருத்தி செல்நெறி செல்ல வேண்டும், எந்தெந்த துறைகளில் நாங்கள் இராஜதந்திர ரீதியாக வளர வேண்டும் என்கிற விடயங்கள் ஒன்றும் ஆய்வு செய்யப்பட்டு தீர்மானங்கள் எடுக்கப்படவில்லை. வெறுமனே சந்தைக்கு போகின்ற போது பொருள்கள் வாங்குகின்ற பட்டியயல் போன்று எங்கள் அபிவிருத்தியை பட்டியலிட்டு சொல்ல முடியாது. எனவே இதற்கு துல்லியமான ஆய்வு வேண்டும்.

எங்களுடைய அறிஞர்களும் பொருளாதார விற்பன்னர்களும், அரசியல் ஆய்வாளர்களும், வரலாற்று அறிஞர்களும் நாங்கள் எந்த செல்நெறியில் பயணம் செய்ய வேண்டும் என்று தீர்மானிக்க வேண்டும். உலக வரலாறு தருகின்ற படிப்பினைகளூடாக நாங்கள் எவ்வாறான பொருளாதாரத்தை கட்டியமைக்க வேண்டும் என்று தீர்மானிக்க வேண்டும். அரசாங்கம் எந்தவொரு தொழிற்சாலையையும் தானாக கட்டிவிடாது என்பதுதான் உண்மை. ஆனால் அத்தகைய தொழிற்சாலைகளை தனியார் துறையினரால் போட முடியும். எப்படியான தொழிற்சாலைகளை நாங்கள் உருவாக்க வேண்டும் என்கிற கேள்வி வருகின்றது.

காங்கேசன்துறையில் சீமெந்து தொழிற்சாலை இருந்த இடமும், அதையொட்டி சுண்ணாம்புக் கற்கள் அகழ்வதற்காக இருந்த இடமுமாக சுமார் 175 ஏக்கர் நிலம் உண்டு. அதில் ஒரு பகுதி இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருக்கின்றது. மிகுதி பயன்படுத்தக் கூடியதாக இருக்கிறது. எல்லாமே ஒட்டுமொத்தமாக கைத்தொழில் பேட்டை ஒன்றுக்காக அர்ப்பணிக்கப்பட வேண்டிய காணிகள். ஆனால் இங்கே தொடர்ந்து இந்தப் பிரதேசத்தில் சுண்ணாம்புக் கல்லை அகழ முடியாது. அப்படி அகழுவோமாக இருந்தால் எங்களது நிலத்தடி நீரைத் தாங்கும் பாறை உடைக்கப்பட்டு நிலத்தடி நீருக்கு அபாயம் ஏற்படும். சுண்ணக் கல்லை அகழாமல் வேறு தொழில் முயற்சியை

செய்வதாக இருந்தால் நாங்கள் சீமெந்து பொதி யிடும் தொழிற்சாலை ஒன்றை காங்கேசன்துறை துறைமுகத்தை அண்டியதாக போட முடியும். எவ்வாறு திருகோணமலையில் துறைமுகத்துக்குள்ளேயே ஒரு மலையடிவாரத்தை உடைத்து டோக்கியோ சீமெந்து என்கிற பெயரில் பொறியொன்றை நிறுவி வெளி நாடுகளில் இருந்து சீமெந்தை மொத்தமாக கொண்டு வந்து அதனை களஞ்சியங்களில் நிரப்பி பின் அரைத்து பொதியிடுகிறார்களோ அதே போன்றதொரு தொழிற்சாலையை இங்கே உருவாக்க முடியும்.

அதே போன்று ஆனையிறவு குறிஞ்சாத்தீவு உப்பளம் மீண்டும் முழுமையான செயற்பாட்டுக்குள் கொண்டு வரப்பட வேண்டும். அது வடபகுதி மக்களுக்கு சொந்தமான பொறிமுறைக்குள் கொண்டுவரப்பட வேண்டும். அவ்வாறு கொண்டு வந்து மீண்டும் முழு அளவில் உப்பு உற்பத்தியை மேற்கொள்ளும் அதே நேரத்தில் அந்த உப்பை கைத்தொழில் மூலப்பொருளாக பயன்படுத்தக்கூடிய ஒரு இரசாயன தொழிற்சாலையை அருகே அமைக்க முடியும்.

பல்வேறு மேற்கத்தைய நாடுகளின் பிரமுகர்கள் கூட எங்கள் அரசியல் பிரதிநிதிகளை சந்தித்து கதைக்கின்றார்கள். அபிவிருத்தி பற்றி பேசுகின்றார்கள். அந்த தேசங்களின் முதலீட்டாளர்கள் தயாராக இருப்பதாக அறிய முடிகிறது. ஜேர்மன் போன்ற நாடுகளில் இருந்து இரசாயன கைத்தொழிலில் முதலீடு செய்வதற்கு பலர் முன்வந்திருந்தார்கள். அவ்வாறானவர்கள் பரந்தன் இரசாயன தொழிற்சாலையை உருவாக்க முடியும். ஏனெனில் மூலப்பொருள் அங்கே உண்டு. அதே வேளை பல்வேறு புதிய நவீன கைத்தொழில்கள் தொடக்கம் பாரம்பரிய கைத்தொழில்கள் வரை பலவற்றை நாங்கள் உருவாக்க முடியும்.

இந்தியாவின் தமிழ்நாட்டின் கோயம்புத்தூர் பாரிய கைத்தொழில் நகரமாக வளர்ந்து வருகின்றது. பின்னலாடை தொழிலில் தமிழ்நாட்டின் திருப்பூர் மாவட்டம் உலகப்புகழ் பெற்றதாக இருக்கின்றது. தற்காலத்தில் நைஜீரியாவில் இருந்து இந்தியாவுக்கு வந்து திருப்பூரில் தங்கி நின்று அந்த தொழிற்சாலைகளில் வேலை செய்து அந்த தொழிநுட்பங்களை கற்றுக் கொண்டு அந்த இயந்திரங்களையும் வாங்கிக் கொண்டு போய் நைஜீரியாவில் இந்த தொழிலை உருவாக்குகின்ற விடயம் நைஜீரிய நாட்டின் கைத்தொழில் மயமாக்கத்தின் ஒரு அங்கமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. தென்னிலங்கையில் வெலோனா மற்றும் லேடன் போன்ற பின்னலாடை தொழிற்சாலைகள் வெற்றிகரமாக இயங்கும் என்று சொன்னால் நாங்கள் ஏன் தமிழ் நாட்டின் திருப்பூரில் இருந்து அனுபவங்களை பெற்று அங்குள்ள முதலீட்டாளர்களுடன் சேர்ந்து அவற்றை இங்கு ஆரம்பிக்கக் கூடாது? நாங்கள் புதிய திசை நோக்கி சிந்திக்க வேண்டும். இவை எல்லாம் நடக்காமல் போனதற்கு ஏதும் ஆழமான காரணங்கள் இருக்கிறதா என சிந்திக்க வேண்டும்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் மணலாற்றில் தற்போது வெலி ஓயா என மறுபெயரிடப்பட்டுள்ள பிரதேசத்திற்கு அண்மித்ததாக உள்ள பிரதேசத்தில் 3500 ஏக்கர் நிலத்தை அரசு அபிவிருத்தி திட்டத்துக்காக கையகப்படுத்த போவதாக செய்தி வந்துள்ளது. அந்த திட்டத்துக்காக அங்கே காணிகளை வைத்துள்ள தமிழ் மக்களின் காணி அனுமதிப்பத்திரங்களை இரத்து செய்யுமாறு மாவட்ட நிர்வாகத்துக்கு உத்தரவிடப்பட்டதாகவும் பத்திரிகை செய்தியொன்று கூறியது. வெலி ஓயாவில் சீனித் தொழிற்சாலை ஒன்றை போட போவதாக அதன் பின் வந்த செய்தி ஒன்று தெரிவித்தது. இந்த இரு செய்திகளையும் தொகுத்துப் பார்த்தால் தெரியும். 3500 ஏக்கர் நிலத்தில் மிகப்பெரிய கரும்புச் செய்கையை செய்து அங்கே சீனி தொழிற்சாலை போடுவதான திட்டம் வெளிவருகிறது. நிச்சயமாக அந்த 3500 ஏக்கரில் முதலீடு செய்யப் போவது அரசு அல்ல. அரசினுடைய திட்டத்தின் அடிப்படையில் தனியார் ஒருவர் அந்த இடத்தில் முதலிடப் போகின்றார். எங்கள் பிரதேசங்களில் அபிவிருத்தி என்பது அரசாங்கத்தால் முனைப்பாக தூண்டப்படுமாக இருந்தால் அது எங்களுக்கு சொந்தமில்லாத அபிவிருத்தியாகவும் பெரும்பான்மை மக்களுக்கு சாதகமான அபிவிருத்தியாகவுமே இருக்கும். நாங்கள் இதனை மாற்ற வேண்டுமாக இருந்தால் நாங்கள் கைத்தொழில் துறையில் எங்களை விரைந்து கட்டமைக்க வேண்டும் என்பதை தீர்மானிக்க வேண்டும். பலநாடுகளில் மென் பொறியியல் கைத்தொழில்கள், இலத்திரனியல் கைத்தொழில்கள், பல்வேறு விதமான மீள் சுழற்சிக்கு உட்படுத்தக் கூடிய

(பக்கம் 22 ஐ பார்க்கவும்)

தமிழ் ஊடகத் திரட்டு,
லக்சுமி கட்டிடம்,
ஞானபாஸ்கரோதய சனசமூக நிலைய வீதி,
கல்வியங்காடு, யாழ்ப்பாணம்.

நிமிர்வு

மின்னஞ்சல் : nimirvueditor@gmail.com
இணையம் : www.nimirvu.org
தொலைபேசி இல : 021 223 2121

## ஆசிரியர் பார்வை

# ஆறாவது ஆண்டில் அடியெடுத்து வைக்கின்றது நிமிர்வு

நிமிர்வு தனது ஆறாவது ஆண்டில் அடியெடுத்து வைக்கின்றது. அரசியல், சமூகம், பொருளாதாரம் சார்ந்த மாதாந்த அச்சு இதழாக தொடங்கி, கொரோனா பேரிடர் காலத்தில் மாதம் இருமுறை மின்னிதழாக மட்டும் வெளிவந்து இப்போது மீண்டும் மாத மின்னிதழாக இம்மாதத்தில் இருந்து வெளிவர இருக்கிறது.

இதனோடு சேர்த்து கடந்த இரு ஆண்டுகளுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட நிமிர்வு காணொளி ஊடகமும் (Nimirvu Youtube) கணிசமான வளர்ச்சி பெற்று தாயகத்திலும், புலத்திலும் பெரு வரவேற்பை பெற்று வருகிறது. அதிலும் அரசியல், சமூகம், பொருளாதாரம், இயற்கைவழி, கல்வி என பல்வேறு கோணங்களிலும் துறைசார் நிபுணர்கள், செயற்பாட்டாளர்களின் கருத்துகள் முன்வைக்கப் பட்டு வருகின்றன.

தமிழ்மக்களின் தொலைநோக்க தமிழ்த் தேசிய அரசியலையும் சமூக மாற்றத்தையும் நோக்கிய பயணத்தில் உறுதியாக பயணிக்கும் நிமிர்வு பல்வேறு தேசியம், சமூகம் சார்ந்த செயற்பாட்டாளர் களையும் இணைத்துக் கொண்டு பயணிப்பதுடன் புதிய இளையோர்களையும் உள்வாங்கி பயணிப் பதையும் இலக்காக கொண்டுள்ளது.

இன்று இலங்கையின் பொருளாதாரம் படு பாதாளத்தை நோக்கி பயணித்துக் கொண்டிருக் கின்றது. மாறிமாறி ஆட்சிக்கு வந்த சிங்கள பேரின வாத அரசுகள் இனவாதத்தை விதைத்ததன் அறு வடையை இன்று அனுபவிக்க தொடங்கி விட்டார் கள். ராஜபக்சக்களின் குடும்ப ஆட்சி பொருளா தாரம் தொடர்பாக தொடர்ச்சியாக எடுத்த தவறான முடிவுகள் மக்களை இன்று அல்லலுக் குள் உள்ளாக்கி இருக்கின்றன. இந்த நெருக்கடி யால் தமிழ்மக்களும் பாதிக்கப்படும் நிலைக்கு ஆளாகி உள்ளார்கள்.

போர்க் காலத்தில் நன்கொடை என்ற பெயரில் உதவிகளே இலங்கை அரசாங்கத்துக்கு கிடைத்தன. இப்போது கிடைப்பவை எல்லாம் கடன்கள். போருக்கு பிறகு வருமானத்தை தராத திட்டங்களிலும் இராணுவத்தை பலப்படுத்து வதிலும் பல கோடி ரூபாய்களை செலவிட்ட தன் விளைவை இன்று இலங்கை எதிர்கொள்ள தொடங்கியுள்ளது.

நெருக்கடி மிகுந்த போர் காலங்களில் கடுமையான பொருளாதார தடைகளுக்கு மத்தியிலும் தமிழ் மக்கள் சாதாரண வாழ்க்கையை வாழ்ந்து வந் தார்கள். ஆனால் பெரும்பான்மையான சிங்கள மக்கள் பொருளாதார நெருக்கடிகளில் சிக்காமலே அன்று வாழ்ந்து வந்தார்கள். இன்று கோத்தாபய அரசை கொண்டு வந்த சிங்களவர்களே கோத்தா அரசே வீட்டுக்கு போ என கூக்குரலிடும் நிலைக்கு ஆளாகி உள்ளனர்.

தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி யின் விளைவால் இலங்கை ரூபாவின் பெறுமதி கடுமையான வீழ்ச்சியை சந்தித்து வருகிறது. சாதாரண மக்களால் உணவுப்பொருட்களை கொள்வனவு செய்ய முடியாத நிலைக்கு விலை களோ வானளவு உயர்ந்துள்ளன. இன்னும் சிறிது நாட்களில் நாட்டில் உணவுப் பஞ்சம் ஏற்படும் அபாயத்தை நோக்கி நகர்வதாக பொருளாதார வல்லுநர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

இந்நிலையில் தமிழ்மக்கள் போர்க்கால பொருளா தார நடைமுறைகளை பின்பற்ற தொடங்கினால் ஓரளவு மீட்சியடைய முடியும். தேவைகளை குறைத்துக் கொண்டு வீடுகளில் தங்களுக்கு தேவையான மரக்கறிகளை உற்பத்தி செய்து, தற்சார்பு பொருளாதாரத்தை நோக்கி வேகமாக நகர்ந்தால் மட்டுமே தமிழ்மக்களால் இந்த பேரழிவிலிருந்து தப்ப முடியும். இல்லாது விடில் பொருளாதார வலு இல்லாமல் பேரிடருக்குள் தள்ளப்படுவோம்.

- செ. கிரிசாந் -

அட்டைப் படம் - குமணன்

# சிறீலங்காவில் நீதியின் விலை ஒரு இலட்சம் ரூபாய்கள்




-இசைப்பிரியன்-

சிறிலங்காவின் நீதியமைச்சர் அலி சப்ரி தைமாத இறுதிக் காலப்பகுதியில் வடக்கு மாகாணத்துக்கு வருகை தந்திருந்தார். இவருடைய வருகைக்கு காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் தங்களது கடுமையான எதிர்ப்பை பதிவு செய்திருந்தனர். அவர் கொழும்பு திரும்பிய பின்னர் பங்குனி மாத நடுப்பகுதியில் அமைச்சரவையில் யோசனை ஒன்றை சமர்ப்பித்திருந்தார்.

அதன்படி, 2016 ஆம் ஆண்டு 17 ஆம் இலக்க காணாமல் போனவர்கள் அலுவலகம் பற்றிய சட்டம் மூலம் காணாமல் ஆக்கப்பட்ட நபர்கள் தொடர்பாக உரிய விசாரணைகள் நடத்தப்பட்டு இறப்புச் சான்றிதழ் அல்லது காணக் கிடைக்கவில்லை என்ற சான்றிதழை வழங்குவதற்காக பதிவாளர் நாயகத்திற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது. பதிவாளர் நாயகத்தினால் சான்றிதழை பெற்றுக்கொண்ட காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பத்திற்கு ஒரு இலட்சம் ரூபாவை ஒரு தடவை மாத்திரம் வழங்குவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

இதன்மூலம் இலங்கைத்தீவில் காணாமல் ஆக்கப்பட்டுள்ள சம்பவங்கள் நடந்துள்ளன என்பதனை ஒத்துக் கொண்டுள்ள அரசாங்கம், மறுபுறம் பொறுப்புக்கூறலை இந்த பொருளாதார நெருக்கடியிலும் பணத்தை வீசியெறிந்து சரிசெய்து விடலாம் என தப்புக்கணக்கு போடுகின்றது. போருக்கு பின்னரான கடந்த 13 ஆண்டுகளாக நீதி கேட்டு போராடிக் கொண்டிருக்கும் உறவுகள் மாறி மாறி ஆட்சிக்கு வந்த சிங்கள அரசுகளுக்கு தாங்கள் கேட்பது நிதியல்ல, நீதியே என தெளிவாக பல தடவைகள் சொல்லியும் விட்டார்கள். ஆயினும், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் விவகாரம் தொடர்பில் எவ்வித பொறுப்புக்கூறலையும் செய்ய மறுக்கும் அரசாங்கம் ஒரு இலட்சம் ரூபாவை மட்டும் இழப்பீடாக வழங்கி அப்பிரச்சினையை நிரந்தரமாக முடித்து விட வேண்டும் என்ற நிகழ்ச்சி நிரலை குறிவைத்து இயங்குகிறது. இது ஒரு தவறான அணுகுமுறையாகும். கடந்த கால இனப்படு கொலைகளுக்கு பொறுப்புக் கூறாமல் இலங்கைத் தீவின் எதிர்காலத்தை திட்டமிடுவதென்பது ஒரு கசப்பான விடயமாகவே அமையும்.

உரிய பொறுப்புக் கூறல் பொறிமுறை இல்லாமல் போனால் மீள நிகழாமை என்பது கேள்விக்குள்ளாகும். ஆய்வொன்றின் படி இலங்கையில் பத்தாண்டுகளுக்கு ஒரு முறை இனங்களுக்கிடையான கலவரங்கள், உயிர் பறிப்புகள், சொத்தழிவுகள் இடம்பெற்று வந்துள்ளதாக கண்டறியப்பட்டுள்ளது. ஆகவே தான் நிலைமாறுகாலகட்ட நீதியின் முக்கிய நான்கு அம்சங்களில் ஒன்றான மீள நிகழாமையை உறுதிப்படுத்துமாறு சர்வதேச நாடுகள் இலங்கையை வலியுறுத்திக் கொண்டிருக்கின்றன. மீள நிகழாமைக்கு உத்தரவாதம் வழங்கப்படாது விட்டால், இலங்கைத் தீவு இரு துருவங்களாக பிளவுபடுவதை தவிர்க்க முடியாது. பாதிக்கப்பட்ட தரப்பாகிய தமிழ்மக்கள் ஒடுக்குமுறைகளில் இருந்து தங்களை தற்காத்துக் கொள்வதற்கு பிரிந்து போவதே உறுதியான பாதுகாப்பையும் நிரந்தர தீர்வையும் மனித கௌரவத்தையும் அளிக்கும் என்ற நம்பிக்கைக்கு அவர்களைத் தள்ளும்.

இந்நிலையில், இறுதிக் கட்டப் போரின் போது அரச படைகளின் கைகளில் ஒப்படைக்கப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட பெருந்தொகையான உயிர்களுக்கு பொறுப்புக் கூற வேண்டியவர்களில் ஒருவரான அன்றைய ஜனாதிபதியும் இன்றைய பிரதமருமான மஹிந்த ராஜபக்ச 20.03.2022 அன்று யாழ்ப்பாணம் மட்டுவிலுக்கு பொருளாதார மத்திய நிலைய மொன்றை திறக்க வந்திருந்தார். காணாமல் ஆக்கப் பட்டோரின் உறவுகள் தமது பிள்ளைகளுக்கு என்ன நடந்தது என்று வெளிப்படுத்துமாறு கோரும் ஒரு கவனயீர்ப்பு போராட்டத்துக்கு தயாராகி மட்டுவிலை நோக்கி பேருந்துகளில் வந்து கொண்டி ருந்தனர். அவர்களது பேருந்தை நடு வெயிலுக்குள் நிறுத்தி அவர்களை இறங்க விடாமல் தடுத்த இராணுவமும், பொலிஸாரும் அவர்களை பேருந்துக் குள் வைத்து பூட்டியுள்ளனர். தாய்மார்களை கொடூர மாக தாக்கியுமுள்ளனர். உடல் ரீதியில் கடுமையாக பாதிக்கப்பட்ட இரண்டு வயதான தாய்மார்கள் மருத்து வமனையில் சேர்க்கப்பட்டிருந்தனர்.

தாய்மார்கள் தாக்கப்பட்டமையானது நீதி மற்றும் பொறுப்புக்கூறல் இரண்டுக்கும் விழுந்திருக்கும் அடி. ஆனால் தமிழ் அரசியல் தலைமைகள் அதனை தமிழ் தேசத்தின் ஆன்மா மீது விழுந்திருக்கும் அடியாக உணரத் தலைப்படவில்லை. இந்த கொடூர சம்பவத் துக்கு எவ்வித எதிர்ப்புகளையும், கண்டனங்களையும் பதிவு செய்யாத தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரான சம்பந்தன் மறுநாள் அரசின் ஏற்பாட்டில்

**“தாய்மார்கள் தாக்கப்பட்ட மையானது நீதி மற்றும் பொறுப்புக்கூறல் இரண்டுக்கும் விழுந்திருக்கும் அடி. ஆனால் தமிழ் அரசியல் தலைமைகள் அதனை தமிழ் தேசத்தின் ஆன்மா மீது விழுந்திருக்கும் அடியாக உணரத் தலைப்படவில்லை”**

இடம்பெற்ற சர்வ கட்சி மாநாட்டில் பங்கேற்று இருக் கிறார்.

ராஜபக்சக்களின் தவறான பொருளாதாரக் கொள்கை, ஊழல் மோசடி நிறைந்த ஆட்சிமுறை என்பவற்றால் அதலபாதாளத்தில் விழுந்திருக்கிறது நாடு. இந்நிலை யில் தனிச்சிங்கள பெரும்பான்மை வாக்குகளினால் மட்டுமே தான் ஆட்சிபீடம் ஏறியுள்ளதாக கூறிய கோத்தாபய ராஜபக்சவை அவருக்கு வாக்களித்த மக்களே வீட்டுக்குப் போ கோத்தா, அமெரிக்கா வுக்கு ஓடிவிடு என்று கோசமிட்டவாறு வீதிக்கு வந்து போராடிக் கொண்டிருக்கிறார்கள். பிரதான எதிர்க் கட்சிகள் கோத்தாவுடனான சந்திப்புக்கான அழைப்பு களை புறக்கணித்து வருகின்றன. இந்த நிலையிலும், தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என்று கூறிக்கொள்ளும் தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் மட்டும் கோத்தாபய அழைக்க முன்னரே விழுந்தடித்துக் கொண்டு சந்திக் கின்றனர்.

ஜனாதிபதியாக பதவியேற்ற புதிதில் கோத்தாபய ராஜபக்ச தான் தமிழ் மக்களுக்கான தீர்வு பற்றி எத்த கைய பேச்சுவார்த்தைகளையும் செய்வதற்கு தயார் இல்லை என்றும், அதற்கான அவசியம் எதுவும் இல்லை என்றும் இந்திய பத்திரிகை நேர்காணல் ஒன்றில் பகிரங்கமாக கூறியிருந்தார். தமிழ் தரப்புகளால் விடுக்கப்பட்ட அழைப்புகளையும், சாதகமான சமிக் ஞைகளையும் புறக்கணித்திருந்தார். ஜெனிவா மனித உரிமை விவகாரங்களில் நெருக்கடியை சந்தித்திருந்த சிறீலங்கா அரசை கடந்த காலங்களில் எப்படி பிணை எடுத்து விடும் செயலை தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பு செய்ததோ அதேபோல இன்றைய பொருளா தார நெருக்கடிகளிலும் இருந்து அரசை பாதுகாக்க முனைகிறது.

தற்போதைய சூழ்நிலையில், அதிகரித்துள்ள கடன் சுமை பொருளாதார நெருக்கடிகளிலிருந்து நாடு மீள வேண்டுமாயின் சர்வதேச நாணய நிதியத்தின் உத வின பெற்றுக் கொள்வதை தவிர கோத்தாபய அரசுக்கு வேறு எந்த தெரிவுகளும் கிடையாது. இத்தகைய சூழலில் இலங்கைத்தீவில் வாழும் பல்லின மக்களின் பன்மைத்துவத்தை அங்கீகரித்து ஏனைய தேசிய இனங்களும் கௌரவமாக நடத்தப்படும் உறுதிப்பாட்

டுடன் மனிதஉரிமைகள் உள்ளிட்ட பல்வேறு நிபந்தனைகளையும் சர்வதேச நாணய நிதியம் விதிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. அந்த நிதியை பெற்றுக்கொள்ளும் ஒப்பந்தத்துக்கு செல்லுவதற்காகத் தான் தமிழ்த்தரப்பின் தயவையும், சம்மதத்தையும் பெற்றுக் கொள்ள வேண்டிய ஒரு இக்கட்டான நிலைமைகளுக்குள் கோத்தாபய அரசு இருக்கிறது. தமிழ் தேசிய கூட்டமைப்பும் கடந்த காலங்களில் நடந்து கொண்டதைப் போலவே எத்தகைய பேரம் பேசல்களையும் செய்யாமல் விலை போகும் ஒரு ஒத்தோடி அரசியலை மீண்டும் செய்ய தாராள மனசு கொண்டு சந்தித்திருகின்றனர்.

இலங்கைத்தீவில் இப்போதும் நீறுபூத்து எரிந்து கொண்டிருக்கும் பிரச்சினையாக காணாமல் ஆக்கப்பட்டோர் பிரச்சினையே உள்ளது. காணாமல் ஆக்கப்பட்டோருக்கு என்ன நடந்தது என்பது தொடர்பில் அவர்களுக்கு உரிய நீதி கிடைக்க வேண்டுமென ஐ.நா உள்ளிட்ட சர்வதேச நிறுவனங்களும் அரசை வலியுறுத்தி வருகின்றன.

சர்வதேச பொறிமுறையான நிலைமாறுகால நீதியின் கீழ் இழப்பீடு வழங்குவதெனில் உதாரணமாக ஒரு குடும்பத்தலைவர் காணாமல் ஆக்கப்பட்டால் அக்குடும்பத்தலைவரின் இதுநாள் வரையிலான உழைப்பு வருமானம் உள்ளிட்டவற்றை கணக்கிட்டு ஒரு குடும்பத்துக்கு மட்டுமே பல இலட்ச ரூபாய்கள் வழங்க வேண்டியிருக்கும். அப்படியான பெருந்தொகையை வழங்கவும் பேரினவாத அரசுகள் தயாரில்லை.

ராஜபக்சக்களை இப்போதும் விரட்டிக் கொண்டிருக்கும் காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம் தான் தமிழ்மக்களுக்கு இன்று எஞ்சியுள்ள ஆயுதமாக உள்ளது. இனப்படுகொலைக்கு நீதி வேண்டும் என்கிற கோரிக்கைக்கு வலு சேர்ப்பதாகவும் இவ்விவகாரமே உள்ளது. அதனால் இந்தப் போராட்டத்தை நீர்த்துப் போக செய்ய விடாமல் நீதி மற்றும் பொறுப்புக் கூறல் பொறிமுறையை நோக்கி நகர்த்த வேண்டும். அதுவே ஈழத்தமிழர்களின் இருப்பு நிரந்தர பாதுகாப்பு, மனித கௌரவம், வாழ்க்கைத்தர மேம்பாடு, சகலவற்றுக்கும் உத்தரவாதம் அளிக்கும்.

## "கொன்றவனையே நீதிபதியாக ஆக்கும் உள்நாட்டு நீதி விசாரணை பொறிமுறை என்பது கடந்த காலங்களில் இலங்கையில் தோல்வியையும், ஏமாற்றத்தையுமே கொண்டு வந்தன"

சாட்சியமற்ற பெரும் இனவழிப்பு போரை நடாத்தி விட்டு உள்நாட்டில் தாங்களே பொறுப்புக் கூறலையும் செய்வோம் என இலங்கை அரசு பல தடவைகள் ஐ.நாவிலும் கூறியிருக்கிறது. உள்நாட்டு பொறிமுறை இலங்கையில் சாத்தியமில்லை என்பதற்கு கடந்த பல்லாண்டுகளாக தமிழ்மக்கள் இனவாத ரீதியில் ஒடுக்கப்படுகின்றமையே சாட்சி. ஆகவே சர்வதேச நீதி விசாரணை ஒன்றின் மூலமாக மட்டுமே நடந்த இனப்படுகொலைக்கு நீதி கிடைக்கும் என தமிழ்மக்கள் நம்புகிறார்கள்.

கொன்றவனையே நீதிபதியாக ஆக்கும் உள்நாட்டு நீதி விசாரணை பொறிமுறை என்பது கடந்த காலங்களில் இலங்கையில் தோல்வியையும், ஏமாற்றத்தையுமே கொண்டு வந்தன. அரசு நியமித்த எந்தவிதமான செயற்பாடுகளுக்கும் வழி வகுக்காத வெறும் கண்துடைப்புக்கு மாத்திரமே நியமிக்கப்பட்ட பல்வேறு ஆணைக்குழுக்களே இதற்கு சாட்சி.

எனவே நீதி மற்றும் பொறுப்புக் கூறலுக்கு உத்தரவாதமோ வாய்ப்போ அளிக்காத உள்நாட்டு பொறிமுறை தொடர்பில் தமிழ்மக்களுக்கு நம்பிக்கையீனங்களும் பலத்த சந்தேகங்களும் உண்டு.

உண்மையை கண்டறிதல், நீதியை நிலைநாட்டுதல், இழப்பீடு வழங்குதல், மீள நிகழாமையை உறுதிப்படுத்தல் ஆகிய செயன்முறைகள் பிழைத்தால் தமிழர்களாகிய நாம் இத்தீவில் வாழ முடியாமல் எமது இருப்பு கேள்விக்குறியாகிவிடும்.



# புதிய உத்தேச அரசியல் யாப்பும் ஈழத்தமிழருக்கான அரசியல் தீர்வும்

**ஈழத்தமிழ் அரசியல் வரலாற்றறிஞர் மு. திருநாவுக்கரசு அவர்களால் 27.02.2022 அன்று நடாத்தப்பட்ட "புதிய உத்தேச அரசியல் யாப்பும் ஈழத்தமிழருக்கான அரசியல் தீர்வும்" என்கிற உரையாடலின் முதல் பகுதி இங்கே பிரசுரமாகிறது.**

இலங்கையினுடைய அரசியல் யாப்பு வரலாறு முற்றிலும் விஞ்ஞான பூர்வமாக பார்க்கப்பட வேண்டியது. இலங்கைக்கே உரிய தனித்துவமான விசேடமான கலாச்சார அரசியல் பின்னணியில் இருந்து பார்க்கப்பட வேண்டியது. இது சம்பந்தமாக நாங்கள் மேலெழுந்தவாரியான பார்வைகளை கொண்டிருப்பதனால் பல வேளைகளில் மிகப்பெரும் தவறுகளை விட்டு எமது மக்களுக்கு தீங்கு செய்யும் வரலாற்றுப் போக்கை கொண்டிருக்கிறோம். முதலாவதாக அரசியல் கண்ணோட்டத்தோடு அரசியல் அர்த்தத்தோடு அரசியல் யாப்பை பார்ப்பதானால், அது வெறும் சட்ட வரையறைக்குள்ளால் பார்க்கப்படக் கூடாது. மாறாக அது முற்றிலும் ஒரு சமூக அரசியல் பொருளாதார இயக்க பின்னணிக்குள்ளால், வரலாற்றுப் போக்குக்குள்ளால் பார்க்கப்பட வேண்டும். அதுவே அரசியல் அர்த்தத்தில் மக்கள் கூட்டத்தின் வளர்ச்சியை, விருத்தியை, எதிர்காலத்தை புரிந்து கொள்வதற்கு இலகுவாக உதவக் கூடியதாக இருக்கும்.

இந்த உரையாடல் அரசியல் யாப்பை அதன் முழுமையான பின்தளத்தில் வைத்து பார்க்க விரும்புகிறது. அரசியற் பிரச்சினையை பார்ப்பதற்கு என்று விஞ்ஞான பூர்வமான முறைகள் உண்டு. அரசியற் பிரச்சினை வந்தால் அதனை முதலாவது தத்துவார்த்த ரீதியில் (philosophical thinking) சிந்திக்க வேண்டும். தத்துவார்த்தக் கண் கொண்டு அந்தப் பிரச்சினையை பார்க்க வேண்டும். இரண்டாவது அரசியற் தீர்வு (political solution). எந்த ஒரு பிரச்சினையும் அரசியலுக்கு கீழ்ப்பட்டதே. எல்லாம் அரசியலுக்கு உட்பட்டதே. ஆதலால் எந்த ஒரு பிரச்சினையையும் அரசியல் தீர்வுக்குள்ளால் பார்க்க வேண்டும். மூன்றாவது சட்ட வரைபடத்துக்குள்ளால் (legal frame work) அது பார்க்கப்பட வேண்டும். அதற்கான சட்ட ஏற்பாடுகளை செய்ய வேண்டும். நான்காவது நிர்வாக ரீதியான (administrative arrangements) ஏற்பாடுகளுக்குள்ளால் பார்க்கப்பட வேண்டும்.

ஆகவே ஒரு மக்கள் கூட்டத்தினுடைய பிரச்சினை இந்த நான்கு அடிப்படைகளிலும் அணுகப்பட்டால் மட்டுமே அவர்கள் வாழும் காலத்திலும் அதற்குப் பிறகும் தக்க நடைமுறைக்கு போகக் கூடியதாக இருக்கும்.

முதலாவதாக ஒரு அரசியல் யாப்பை முற்று முழுவதுமாக அதனுடைய பண்பாட்டு வரலாற்று தளத்தில் வைத்து பார்க்க வேண்டும். இலங்கையினுடைய அரசியல் யாப்பை பார்ப்பது என்பது நூறு வீதம் அதனுடைய புவிசார் வரலாற்றுப் பின்னணியில் வைத்து பார்க்கப்படுவதில் ஆரம்பிக்கப்பட வேண்டி இருக்கிறது. டொனமூர் யாப்பிலிருந்து இலங்கையில் வரையப்பட்ட அனைத்து யாப்புகளும் இலங்கைக்கே உரிய புவிசார் வரலாற்றுப் பின்னணியோடு வரையப்பட்டுள்ளன. ஆனால் தமிழ்த் தரப்பு, தமிழ்த் தலைவர்கள் அதனை அவ்வாறு ஒருபோதும் பார்த்ததில்லை. வெறுமனே பிரதிநிதித்துவ வாதமாகவே ஆரம்பத்திலிருந்தே அதாவது 1833 ஆம் ஆண்டிலிருந்தே அவர்கள் பார்த்தார்கள். கோல்புறூக் அரசியல் யாப்பிலிருந்தே அவர்கள் வெறும் பிரதிநிதித்துவ முறை ஊடாகத் தான் அரசியல் யாப்பை பார்த்தார்கள். இது ஒரு மோசமான அணுகுமுறையாகும். அதற்கு காரணம் அரசியல் யாப்பை பற்றி பார்க்கின்ற சிந்தனை விருத்தியடையாமை தான்.

இந்த அரசியல் யாப்பை பற்றி பார்க்கின்ற மூன்று விதமான நபர்கள் உண்டு. ஒன்று சட்டவாளர்கள், இரண்டாவது அரசியல் ஆய்வாளர்கள் அல்லது அரசியல் விஞ்ஞானிகள் அல்லது அரசறிவியலாளர்கள், மூன்றாவது வரலாற்று ஆய்வாளர்கள். இந்த மூன்று பேருடைய பார்வைகளிலும் வேறுபாடுகள் உண்டு.

சட்டவாளர்களைப் பொறுத்தவரையில் ஒரு அரசியல் யாப்பை சட்ட வழிகளுக்குள்ளால் தான் பார்ப்பார்கள். சட்ட வழிகளுக்குள்ளால் பார்ப்பது என்னவென்றால் எழுதப்பட்டிருக்கும் ஒரு சட்டம் நடைமுறையில்

எவ்வாறு பொருந்துகிறது பொருந்தவில்லை என்று பார்ப்பது. நடைமுறைப் பிரச்சினையோடு பொருந்துகிறதா இல்லையா என்று பார்ப்பதும் அந்த சட்டம் சம்பந்தமான விளக்கமும் நீதிமன்ற தீர்ப்புகளுக்கு உட்பட்டு செயற்படுவதும் அந்த நீதிமன்ற தீர்ப்புகளுக்கு பொருத்தமாக அதனை வியாக்கியானப்படுத்துவதும் தான் சட்டவியலாளர்களுடைய பணி. அவர்களுடைய பார்வை அப்படித்தான் இருக்கும். ஏனென்றால் சட்டவியலாளர்கள் ஒரு அரசியல் யாப்பை நிச்சயமாக வரிகளுக்குள்ளால் பார்ப்பார்கள்.

அரசியல் விஞ்ஞானிகள் அவ்வாறில்லை. அவர்கள் சற்று மேலே போவார்கள். அரசியல் விஞ்ஞானிகள் அல்லது அரசறிவியலாளர்கள் அதன் சட்ட வரையறை எப்படி ஒரு மக்கள் கூட்டத்தின் பிரச்சினைகளை உள்ளடக்கி இருக்கிறது என்று பார்ப்பார்கள். அந்த சட்ட வரையறை எவ்வாறு மக்கள் பிரச்சினைகளை தீர்க்க உகந்ததாக இருக்கிறது, அதன் பொருத்தப்பாடு பொருத்தமின்மைகள் என்ன, அவற்றில் எத்தகைய மாற்றங்களை செய்யலாம், செய்ய வேண்டும், செய்யக்கூடாது என்பது போன்ற விடயங்களை ஆராய்வது அரசியல் விஞ்ஞானிகளுடைய பணியாக இருக்கிறது.

வரலாற்றாளர்களின் பணி இந்த இரண்டிலிருந்தும் வேறுபடுகிறது. அரசியல் யாப்பு மட்டுமின்றி எந்த சட்டமாகவும் இருக்கலாம் அப்படி எழுதப்பட்டிருக்கும் ஒரு சட்டம் என்பது அது முழு சமூகத்தினுடைய நடத்தைகளோடும் எவ்வாறு சம்பந்தப்படுகின்றது என்று பார்ப்பார்கள். முழு சமூகத்தையும் வழிநடத்துவதில் அது எவ்வாறு பங்களிக்கின்றது என்பதில் இருந்து எழுதப்பட்டிருக்கும் யாப்பு வரலாற்றுப் போக்கில் வரலாற்றின் வளர்ச்சிக்கு, மக்களின் வளர்ச்சிக்கு, மக்களின் வாழ்க்கைக்கு உதவுகின்றதா இல்லையா என்று பார்ப்பார்கள். வரலாற்றாளர்கள் எழுதப்பட்ட வரிகளையோ எழுதப்பட்ட சட்ட வரையறைகளையோ கடந்து எழுதப்பட்ட யாப்பின் கீழ் உள்ள மக்களின் நடத்தைகள் எவ்வாறு காணப்படுகின்றன என்று பார்ப்பார்கள். மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதில் அது எவ்வாறு வெற்றி அடைந்திருக்கிறது தோல்வி அடைந்திருக்கிறது என்று சட்டத்திற்கு வெளியே அதாவது சட்டத்திற்குள் சிறைப்படாமல் அவர்கள் பார்ப்பார்கள். ஒரு யாப்பு நடைமுறைக்கு வந்த நாளில் இருந்து அதாவது டொனமூர் யாப்பை எடுத்தால் 1931 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்டதில் இருந்து கொண்டு வரப்பட்ட சட்டங்கள், நாடாளுமன்ற விவாதங்கள், சட்ட சபை விவாதங்கள், உள்ளூராட்சி சபை விவாதங்கள், மக்களுடைய பண்பாடு கலை இலக்கிய செயற்பாடுகள், இவை எல்லாவற்றுக்கும் அந்த அரசியல் யாப்பு எப்படி இடம் கொடுத்து அந்த மக்களின் வாழ்வை ஒருங்கிணைத்தது என்பதனை வரலாற்றாளர்கள் பார்ப்பார்கள்.

எனவே வரலாற்றாளர்கள் எப்போதுமே ஒரு அரசியல் யாப்பை அதன் வரிகளைக் கடந்து அதாவது அங்கு எழுதப்பட்டிருக்கும் வரிகள் மக்களுக்கு என்ன செய்கிறது செய்யவில்லை என்பதையும் கடந்து, அந்த காலகட்டத்தில் நடக்கின்ற அரசியல் யாப்பு வளர்ச்சி எப்படி இருக்கிறது, அதன் செயற்பாடு எப்படி இருக்கிறது என்பதையும் பார்ப்பார்கள். அதன் மூலம் ஒரு முடிவுக்கு வருவார்கள். அந்த அரசியல் யாப்பு மக்களின் வளர்ச்சிக்கு உகந்தது–உகந்ததல்ல, அது திருத்தப்பட வேண்டும். திருத்தப்பட வேண்டியதல்ல. என்பன போன்ற விடயங்களை வரலாற்றாளர்கள் சொல்வார்கள்.

எனவே வரலாற்றாளர்கள் அரசியல்யாப்பை பார்ப்பது என்பது வேறு விதம். நான் இங்கு இந்த மூன்றாவது தரப்பிலிருந்து தான் அரசியல் யாப்பை பார்க்கப் போகின்றேன். அதற்காக சட்ட வரிகளைக் கைவிட்டோ, சட்ட வரையறைகளை கைவிட்டோ நான் போகப் போவதில்லை. நிச்சயமாக சட்ட வரிகளுக்குள்ளாலும், சட்ட வரையறைகளுக்குள்ளாலும், வரலாற்று நியதிக்குள்ளாலும், அதாவது மூன்றுக்குள்ளாலும் சேர்த்துத்தான் நான் விடயங்களை பார்க்கப் போகின்றேன்.

இப்போது நீங்கள் ஒன்றைக் கவனிக்கலாம். சட்ட வரையறை (legal frame work) என்பது தான் அரசியல்யாப்பு. அது காணப்படும் சமூகத்தின் பிரச்சினையை தீர்ப்பதற்கான வழிகாட்டலை மக்களுக்கு செய்வது தான் அரசியல் யாப்பு. அமெரிக்காவைப் பொறுத்தவரையில் அமெரிக்க நாட்டின் பைபிளாக, வேத நூலாக காணப்படுவது அதனுடைய யாப்பு. அதனைத் தான் அவர்கள் தங்கள் வழிகாட்டி நெறியாகக் கொள்கின்றார்கள்.

இங்கு தான் எழுதப்பட்ட முதலாவது அரசியல் யாப்பிலிருந்து பிரச்சினையை ஆரம்பிக்கப் போகி

ன்றேன். எழுதப்பட்ட முதலாவது அரசியல் யாப்பாகிய அமெரிக்க அரசியல் யாப்பு 243 வருட நடைமுறையை கொண்டிருக்கிறது. சுமார் இரண்டரை நூற்றாண்டு கால வரலாற்றை எட்டிக் கொண்டிருக்கிறது. உலகிலேயே மிக சுருக்கமாக மிகக் குறைந்த பக்கங்களில் எழுதப்பட்டு நீண்டகாலமாக நடைமுறையில் இருக்கும் அரசியல் யாப்பு அமெரிக்காவினுடையது தான். அந்த 243 வருட கால நடைமுறையில் அதற்கு இருக்க கூடிய இயல்பு, அதன் உள்ளடக்கங்கள் என்பவை ஏனைய நாடுகளில் இருக்கக் கூடிய அந்தப் போக்குகளில் இருந்து வேறுபட்ட பரிமாணங்களை உடையவை. இந்த வேறுபாடுகளுக்கு முக்கிய காரணம் அவற்றின் சமூக உள்ளடக்கமே.

உதாரணமாக அமெரிக்கா, இந்தியா, சீனா போன்ற மூன்று நாடுகளையும் அவற்றின் அரசியல் யாப்புகளையும் எடுத்துக் கொண்டால், மிக குறைந்த பக்கங்களில் எழுதப்பட்ட யாப்பு அமெரிக்காவினுடையது. அதே போல் மிக அதிகமான பக்கங்களில் எழுதப்பட்டது இந்தியாவின் அரசியல் யாப்பு. இந்த மூன்றின் இயல்புகளையும் பார்த்தோமென்றால் ஈழத்தமிழர்களுக்கு அரசியல் யாப்பு ரீதியான தீர்வு இலங்கையில் எப்படி நடக்கும் அல்லது நடக்காது என்பதனை கண்ணை மூடிக் கொண்டே சொல்ல முடியும். அரசியல் யாப்பு ரீதியான தீர்வுக்கு இலங்கை அரசியல் சமூக கலாச்சாரம் ஒரு போதும் தகுதியானதாக இல்லை. எனவே என்னுடைய கணிப்பீடு **இலங்கை அரசியலில் அரசியல் யாப்பு ரீதியான தீர்வு என்ற ஒன்று வரலாற்று ரீதியாகவும், இன்று காணப்படுகின்ற சமூக, அரசியல் வரலாற்று போக்கின்படியும் சாத்தியமில்லை.** இதையொட்டி எந்த விதமான கற்பனைகளுமின்றி முற்றிலும் விஞ்ஞான பூர்வமாக நான் உங்களுடன் உரையாடப்போகிறேன்.

இந்தியாவினுடைய அரசியல் யாப்பு என்பது பெரிதும் மகாபாரத கலாச்சாரத்தை அப்படியே பிரதிபலித்தது. மகாபாரதம் என்கிற நூலைப் படித்துவிட்டு இந்திய யாப்பை படிக்கின்ற ஒவருக்கு இந்திய யாப்பு மகாபாரத நூலின் ஒரு வெளிப்பாடாக இருப்பதை காண்பீர்கள். இந்திய யாப்பினுடைய கருத்து உள்ளடக்கங்கள் மகாபாரத கலாசாரத்தின் கருத்து உள்ளடக்கங்களை கொண்டிருக்கின்றது. இந்திய யாப்பின் தொகுப்பு மகாபாரத உபகதைகளைப் போன்று இருக்கின்றது. மகாபாரதத்தின் பெருங்கதைகளை விடவும் அதன் உபகதைகள் அதிகம். ஒரு பெருங்கதையின் போக்குக்குள் ஆயிரம் உபகதைகள் வரும். அப்படி வந்து அது பெருத்துப் போயிருக்கிறது.

மகாபாரத கலாசாரத்தின் ஒரு சின்ன உதாரணம் ஒன்றை மட்டும் சொல்லி மகாபாரத கலாசாரத்துக்குள்ளால் இந்திய யாப்பை பாருங்கள் என்று சொல்வேன். அங்கே கர்ணன் என்கிற ஒரு பாத்திரம் இருக்கிறது. இந்திய யாப்பிலும் இந்த பாத்திரத்தை நீங்கள் காணப் போகிறீர்கள். கர்ணன் என்பவன் உன்னதமானவன், கொடைவள்ளல், கண்ணியமானவன், இரக்கமுள்ளவன், அன்புள்ளவன் இப்படி எல்லா விதமான நற்பண்புகளும் கர்ணனுக்கு இருக்கின்றது. ஆனால் அவனுக்கு அப்பாவின் பெயரோ தாயின் பெயரோ தெரியாது. அவர்களின் சாதி, குலம், கோத்திரம் தெரியாது. இப்படி மாகாபாரதம் இன்னொரு பக்கத்தில் சொல்கின்றது. தேரோட்டியின் மகனாக அவன் சாதியற்றவனாக சாதி குறைந்தவனாக உயர்ந்த சாதி கட்டமைப்புக்குள் சத்திரியனாகவோ அல்லது பிரமணனாகவோ எந்த வகையிலும் வராதவனாக அவன் சித்தரிக்கப்படுகின்றான். ஆனாலும் உன்னதமானவனாக இருக்கின்றான். அவனுக்கு வில்வித்தை அரங்கேற்றம் செய்ய சாதிப்பிரச்சினை தடையாக இருந்தது. வில்வித்தை சம்பந்தமான பிரச்சினை ஏற்பட்ட போது ராஜகுலம் இல்லை, சத்திரிய குலம் இல்லை என்று வந்த போது துரியோதனன் அவனுக்கு ஒரு இராச்சியத்தைக் கொடுத்து அரச அந்தஸ்துக்கு உயர்த்திய போது அந்தப் பிரச்சினை தீர்க்கப்படுகின்றது. சாதி குறைந்தவன் இப்போது சத்திரிய குலத்தவனாக மாறுகின்றான். ஆனால் இந்த சத்திரிய குலத்தைச் சேர்ந்தவன் துரியோதனனோடு நிற்கிறான். கொடை வள்ளலாக இருந்த போது கொல்லப்படுகின்றான். இதனை நீங்கள் இந்திய யாப்பு முழுவதும் காணலாம்.

இந்திய யாப்பில் சாதிப்பிரச்சினையும் இருக்கிறது அதற்கு மாற்று வழித் தீர்வும் இருக்கிறது. சாதிப்பிரச்சினைகள் தொடர்பிலான மிக குழப்பகரமான விடயங்களும் உண்டு. சாதி முறைமையும் உண்டு. அது பிழை என்றும் இருக்கிறது. ஜனநாயகம் என்றும் இருக்கிறது. சமஷ்டி ஆட்சி என்றும் சொல்லலாம் அது இல்லை என்றும் சொல்லலாம். ஒற்றையாட்சி என்றும் சொல்லலாம் அரைச் சமஷ்டி என்றும் சொல்லலாம். இப்படி எல்லாவிதமான கலவையையும் கொண்ட ஒரு மகாபாரத கலாசாரத்தை இந்தியா கொண்டிருக்கிறது. இது இந்தியாவுக்கு மட்டும் சொந்தமான

விடயம் கிடையாது. ஒரு நாட்டு மக்களின் அரசியல் தலைமையை நிர்ணயிக்கின்றவர்கள் தங்கள் சமூகத்தில் காணப்படும் விழுமியங்களுக்கு உள்ளாலும் வாழ்க்கை முறைக்குள்ளாலும் தங்களுடைய வரலாற்று வெளிப்பாட்டுக்கு உள்ளாலும் தான் எதனையும் சொல்வார்கள் செய்வார்கள். எனவே அவர்கள் வகுக்கின்ற சட்டங்களும் அந்த சமூகத்தை அந்த மக்களின் வாழ்வை பிரதிபலிப்பதாகவே இருக்கும். ஒரு மனிதனை ஒரு வரலாற்றுப் பிராணி என்பதில் இருந்தோ அவனது அன்றாட வாழ்க்கைப் பிரச்சினைகளில் இருந்தோ பிரித்துப் பார்க்க முடியாது. இது யாப்பை எழுதுபவர்களின் மனப்பாங்குக்கும் பொருந்தும். அதனை செயற்படுத்துபவர்களின் மனப்பாங்கும் அப்படித்தான் இருக்கும். எனவே ஒரு யாப்பு ஒரு போதும் எழுதப்பட்டிருக்கும் வரிகளினால் அப்படியே செயற்படுத்தப்படுவது கிடையாது.

இலங்கையினுடைய அரசியல் யாப்பானது முதலாவதாக ஒரு பரிணாம வளர்ச்சிக்குள்ளால் (constitutional evolution) போகாமல் ஒரு யாப்புப் பின்னடைவுக்கு (constitutional de-evolution) போகிறது. இன்னொரு பக்கம் அது யாப்புத் திரிபுக்கு (constitutional distortion) போகிறது. இலங்கை யாப்புக்கு இரண்டு மோசமான இயல்புகள் இருக்கின்றன. ஒன்று அரசியல் யாப்பு தேய்வு. இரண்டாவது அரசியல் யாப்பு திரிபு என்று சொல்லலாம். எனவே எழுதப்பட்ட வாக்கியங்கள் எவ்வளவோ உன்னதமாக இருந்தாலும் நடைமுறையில் அவை அந்த சமூகத்தில் காணப்படும் இயல்புகளை அப்படியே பிரதிபலிக்கும். அந்த சமூகத்தை சேர்ந்தவர்களால், மற்றும் அதன் தலைவர்களால் நிர்ணயிக்கப்படும் நிர்வாகி, உயரதிகாரி, குறிப்பிட்ட சாதிமான், சாதி குறைந்தவன், போன்ற வரையறைகளுக்குள்ளாலேயே அந்த நடைமுறை இருக்கும்.

சீனாவின் அரசியல் யாப்பை எடுத்துப் பாருங்கள். அதில் பலரும் கவனம் செலுத்தாத ஒரு பகுதி இருக்கின்றது. சீனாவில் மாசேதுங் அரசியல் யாப்பு அந்தஸ்துள்ளவர். மாசேதுங் சொல்கிற ஒரு வசனம் அரசியல் யாப்பு விதிக்கு சமதையானது. அது தான் அரசியல்யாப்பு அந்தஸ்து உள்ளவர் என்பதன் அர்த்தம். இதேபோல் டென்சியாபிங் அரசியல் யாப்பு அந்தஸ்துள்ளவர். இன்றுள்ள சிஜின்பிங் உம் அரசியல் யாப்பு அந்தஸ்துள்ளவர். அரசியல்யாப்பு

## “இலங்கை யாப்புக்கு இரண்டு மோசமான இயல்புகள் இருக்கின்றன. ஒன்று அரசியல் யாப்பு தேய்வு. இரண்டாவது அரசியல் யாப்பு திரிபு என்று சொல்லலாம்”

அந்தஸ்துள்ளவர் நாடாளுமன்றத்தை கூட்டி சட்டமியற்றி சட்டம் போட வேண்டும் என்றில்லை. அவர் சொல்வதெல்லாம் சட்டம் தான். அவர் சொல்வதெல்லாம் யாப்பு. இது சீனாவின் மன்னராட்சிக் கால வெளிப்பாடாக வந்திருக்கிறது. 2300 வருடங்களுக்கு மேற்பட்ட சீன மன்னராட்சிக் கலாச்சாரத்தை பேரரச கலாச்சாரத்தை அப்படியே சீன அரசியல் யாப்பு பிரதிபலிக்கிறது. எனவே அந்த தேசத்து அரசியல், பண்பாடு, கலாசார வெளிப்பாடாக அந்த யாப்பு காணப்படுகின்றது.

நானே மன்னன், நானே அரசு என்று கூறினார் பிரான்சின் 14 ஆம் லூயி மன்னன். இலங்கையிலும் கடந்த 2021 ஆம் ஆண்டு சுதந்திர தின விழாவின் போது நீங்கள் தேடிய தலைவன் நானே (I'm the leader that you searched for) என்று சொன்னார் சனாதிபதி கோத்தாபய. பிரெஞ்சு சக்கரவர்த்தி 14 ஆம் லூயி சொன்னதும் சீனாவில் அரசியல் யாப்பு அந்தஸ்து உள்ளவர்களாக தலைவர்கள் இருப்பதும் இலங்கை ஜனாதிபதி சொல்லியிருப்பதும் ஒன்று தான். அந்தந்த நாடுகளில் காணப்படுகின்ற அரசியல் கலாசாரத்துக்குள்ளால் இது வருகின்றது. மன்னராட்சிக் கலாச்சாரம் எங்கு பலமாக இருக்கின்றதோ அல்லது அதன் பண்டைய கலாசாரங்கள் எங்கு அரசியல் அர்த்தத்தில் பலமாக இருக்கின்றதோ அங்கு இது வரும். இவ்வாறான போக்குகள் ரஷ்யா என்றால் ரஷ்யாவுக்கு உரியதாக வரும் அமெரிக்காவுக்கென்றால் அமெரிக்காவுக்கு உரியதாக வரும்.

(அடுத்த இதழில் தொடரும்.....)




# "PTA நீக்கம் மட்டும் போதாது"

**அகிலன் கதிர்காமர் (Daily Mirror, பங்குனி 7, 2022, தமிழாக்கம் நிமிர்வு)**

1970களின் பிற்பகுதியில் நடந்த கொந்தளிப்பான ஆண்டுகளையும், நம் நாட்டின் எதிர்காலத்தை வேறு வகையில் நிர்ணயிக்க நாம் தேர்ந்து எடுத்து இருக்கக் கூடிய பாதைகளையும் நான் அடிக்கடி நினைத்துப் பார்ப்பது உண்டு. அவசரகாலச் சட்டம் அதன் பின்னர் 1979 இல் இயற்றப்பட்ட பயங்கரவாதத் தடைச் சட்டக் (PTA) காலங்கள் யாழ்ப்பாணத்தில் எனது குழந்தைப் பருவத்தில் மறக்க முடியாத காலங்கள். தொலைநோக்கு பார்வையுள்ள ஜேசுட் சோசலிஸ்ட் (Jesuit Socialist) வணக்கத்துக்குரிய போல் கஸ்பேர்ஸ் (Paul Casperz) உட்பட தெற்கில் இருந்து பல முற்போக்காளர்கள் மேற்கொண்ட ஆதரவுப் பயணம் அதற்கு ஒரு காரணமாக இருக்கலாம்.

PTA இன் அடக்குமுறைகள் அதிகரித்துக் கொண்டு இருந்த அக்காலத்தில் அவர்களுடன் இணைந்து, இனங்களுக்கிடையேயான நீதி மற்றும் சமத்துவத்திற்கான இயக்கத்தின் (Movement for Inter-Racial Justice and Equality, MIRJE) யாழ்ப்பாணக் கிளையை என் தந்தை உருவாக்கினார். ஒரு பள்ளிச் சிறுவனாக இருந்த போது, எனது தந்தை மற்றும் அவரது சக மனித உரிமை ஆர்வலர்களால் ஆவணப்படுத்தப்பட்டு வந்த கடத்தல்கள், தடுப்புக்காவல்கள் மற்றும் சித்திரவதைகள் போன்ற பயங்கரமான கதைகளை நான் கேட்டிருக்கிறேன். அதனால் ஏற்பட்ட அமைதியற்ற நினைவுகள், பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் மீதான நீண்ட கால வெறுப்பை என்னுள் ஏற்படுத்தின. இன்னும் பரந்த அளவில் அரச அடக்குமுறை மீதான வெறுப்பையும் என்னுள் விட்டுச் சென்றன.

தமிழ் இளைஞர்களின் போராட்டத்தை எதிர்கொள்ள அன்றைய ஜே.ஆர்.ஜெயவர்த்தன அரசு இந்த அடக்குமுறைப் பாதையைத் தேர்ந்தெடுக்காமல் விட்டிருந்தால், நமது கடந்த காலம் என்னவாக இருந்திருக்கும்? நான் வளரும் போது எனது தந்தையுடன் நடத்திய உரையாடல்களின் போது இது பற்றி அடிக்கடி

கதைத்திருக்கின்றேன். நமது அரசியல் தலைவர்கள் அப்பிரச்சனைகளை அரசியல் ரீதியாக அணுகி, நமது நாட்டில் உள்ள சமூக உணர்வை மாற்றியிருந்தால், நமது வரலாறு வேறுவிதமாக இருந்திருக்குமா?, உள்நாட்டுப் போரைத் தவிர்த்திருக்க முடியுமா?

எவ்வாறாயினும், போர் நீண்டு கொண்டே போய்க் கொண்டு இருந்ததனால் அப்போது கண்டிக்கத் தக்க வகையில் பயன்படுத்தப்பட்ட அவசரகால சட்டமும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டமும் போர் முடிந்த பின்னர் நீக்கப்படும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தி இருந்தது. ஆனால், அது நடக்கவில்லை. போருக்குப் பிந்தைய ஆண்டுகளில் ராஜபக்ச ஆட்சி மேலும் அதிக இராணுவமயமாக்கத்துக்கும் பாதுகாப்பு பலப்படுத்தலுக்கும் முடிவு செய்தது.

பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்குமாறு நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனால் முன்னெடுக்கப்படும் தற்போதைய பிரச்சாரம் தொடர்பான விவாதத்தில் இதுவே எனது நுழைவுப் புள்ளியாகும். அரசியல்வாதிகள், மதத் தலைவர்கள் மற்றும் மிக முக்கியமாக நாட்டின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த மக்கள் இந்தப் பிரச்சாரத்தில் கையெழுத்திட்டதைப் பார்க்கும் போது புத்துணர்ச்சி ஏற்படுகிறது. இந்த முக்கியமான பிரச்சாரம் வேகம் பெறுகையில், சட்டப் புத்தகங்களில் இருந்து PTA ஐ நீக்குவதுடன் நின்று விடாது இச்சட்டங்களின் வேகம் மற்றும் செயல்திறன் பற்றி எமது சமூகம் கொண்டிருக்கும் சிந்தனைகளை அகற்றுவதற்கு இருக்கும் சில சவால்களை நான் கீழே குறிப்பிடுகிறேன். இந்தச் சிந்தனைகள் ஆபத்தானவை, அகற்றப்பட வேண்டியவை.

எங்கள் சட்டங்கள், பார்க்கப் போனால் எமது இன்றைய அரசின் சட்டவாக்கத்தின் அடிப்படை காலனித்துவ ஆட்சிக்காலத்தில் இருந்து எப்போதும் மற்றைய தேசங்களில் நடப்பவற்றின் செல்வாக்குக்கு உட்பட்டு உள்ளது. இது வடக்கு அயர்லாந்தில் உள்ள பிரச்சனைகளைத் தீர்ப்பதற்காக 1974 இல் ஆங்கிலேயர்களால் இயற்றப்பட்ட PTA ஐ நகலெடுப்பது வரை தொடர்ந்தது. பின்னர் இரு தசாப்தங்களுக்கு முன்னர் அமெரிக்கா தலைமையில் ஆரம்பிக்கப்பட்ட “பயங்கரவாதத்துக்கு எதிரான போர்” பயங்கரவாத தடைச்சட்டத்தை உலகெங்கும் பரவச் செய்தது. ஐ.நா.வில் கூட இந்த அடக்குமுறைச் சட்டங்களை அங்கீகரிக்கும் தீர்மானங்களுக்கு வழிவகுத்தது.

இந்த வரலாற்றுப் பின்னணி முக்கியமானது. ஏனெனில் PTA ஐ நீக்குவதற்கான தற்போதைய பிரச்சாரம் ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் ஐ.நா. மனித உரிமைகள் சபை ஆகியவை கொடுக்கும் சர்வதேச அழுத்தத்துடன் தொடர்புடையது. எவ்வாறாயினும், எந்தப் பக்கம் திரும்பினாலும் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டங்கள் காணப்படும் இந்த யுகத்தில், இந்த சர்வதேச சக்திகள் PTA ஐ முழுமையாக நீக்குவதற்கு உண்மையாக உழைக்க சாத்தியமில்லை. அதற்கான தார்மீக சட்டபூர்வத்தன்மையும் அவர்களுக்கு கிடையாது. எனது கருத்து என்னவெனில், சர்வதேச அழுத்தங்களும் செல்வாக்குகளும் நமது அரசியல் யதார்த்தமாக இருந்தாலும், பயங்கரவாத தடைச்சட்டத்தை ரத்து செய்வதற்கான செயற்பாடு வெற்றியடைய வேண்டுமானால் அதற்கு ஒரு திடமான உள்நாட்டு அடிப்படை இருக்க வேண்டும்.

இந்தச் சூழலில், ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் பேச்லெட்டின் (Bachelet) அறிக்கை மற்றும் பல ஐ.நா. சிறப்பு அறிக்கையாளர்களின் கூட்டறிக்கை ஆகிய இரண்டும் முக்கியம் பெறுகின்றன. இலங்கையில் பயங்கரவாத தடைச் சட்டம் பயன்படுத்துவதை உடனடியாகத் நிறுத்த வேண்டும் என்று அவை கோருகின்றன. இந்த முறைகேடான சட்டத்தின் கீழ் அநியாயமாக தடுத்து வைக்கப்பட்டுள்ள அனைவரும் விடுதலை செய்யப்பட வேண்டும் என்று கோருகின்றன. PTA இன் இத்தகைய இடைநிறுத்தம் ஒரு தொடக்கப் புள்ளியாகும். ஆனால் அது PTA ஐ முழுமையான நீக்கத்தில் முடிய வேண்டும். அது வெறுமனே PTA இன் சீர்திருத்தத்திற்கு வழிவகுக்கக் கூடாது. இவ்வாறான அசாதாரணச் சட்டங்களில் எமக்கு இருக்கும் வரலாற்றை வைத்து நோக்கும் போது இது ஒரு முக்கியமான விடயமாகும்.

## சமூக உணர்வு

நவீன அரசுகளின் வரலாறு, இராணுவச் சட்டங்கள், அவசரகால அதிகாரங்கள், பயங்கரவாத எதிர்ப்புச் சட்டங்கள் என்பவற்றை கொண்டிருக்கிறது. சமூகத்தில் ஒழுங்கை ஏற்படுத்துவதற்கு மட்டுமல்லாமல் நியாயமற்ற அரசியல் நோக்கங்களுக்காக அவை பயன்படுத்தப் படுவதையும் உள்ளடக்கி இருக்கிறது. பார்க்கப் போனால் குற்றவியல் சட்டங்கள் கூட

இதற்குப் பயன்படுத்தப்படுகின்றன. வேறு வார்த்தைகளில் கூறுவதானால், தாராளவாத ஜனநாயகங்கள் மிகவும் நலினமானவை. அவற்றின் கட்டமைப்பு வளர்ச்சி என்பது "சட்டத்தின் ஆட்சி" என்ற கொள்கை, மற்றும் அந்தக் கொள்கையிலிருந்து விதிவிலக்கு வழங்கப்படும் பாரதூரமான அதிகாரத் துஸ்பிரயோகம் ஆகிய இரண்டாலும் உருவாக்கப்பட்டிருக்கிறது.

சட்டம், வன்முறை, ஒழுங்கு என்பவற்றால் நவீன அரசுகள் கட்டமைக்கப் படுகின்றன. தாராளமய ஒழுங்கின் இந்த சிக்கலான தன்மையை 'அவசரகால நிலமையின் நீதிக்கோட்பாடு: காலனித்துவம் மற்றும் சட்டத்தின் ஆட்சி (The Jurisprudence of Emergency: Colonialism and the Rule of Law) என்ற தனது புத்தகத்தில், சட்ட அறிஞர் நாசர் ஹுசேன் (Nasser Hussain)சுட்டிக் காட்டி உள்ளார். அவர் அதற்கு அரசியல் கோட்பாட்டாளர் பார்த்தா சட்டர்ஜி (Partha Chatterjee) யின் "காலனித்துவ வேறுபாட்டு விதி (rule of colonial difference)" பற்றிய கோட்பாட்டை இங்கு பயன்படுத்துகிறார். சமூக, அரசியல் செயற்பாடுகள் மற்றும் "பிறத்தி" என்று ஒதுக்கும் செயற்பாடுகள் ஊடாக எவ்வாறு இராணுவச் சட்டங்கள் அவசரகாலச் சட்டங்கள் தாராளவாத ஒழுங்கிற்குள் வேரூன்றியுள்ளன என்று விபரிக்கிறார்.

இலங்கையைப் பொறுத்தவரையில், அவசரகால விதி மற்றும் பயங்கரவாதத் தடைச் சட்டம் இரண்டும் நமது பின்காலனித்துவ வரலாற்றின் பாதிக்கு மேல் நடைமுறையில் இருந்ததைக் கருத்தில் கொள்ளும் போது இந்த மரபு மிகவும் தெளிவாகத் தெரிகிறது. சிறுபான்மையினரை "பிறத்தி" என்று ஒதுக்குவதனூடாகவும் இந்த மரபு தெரிகிறது. மேலும், அதிகாரத்தில் இருப்பவர்கள் இத்தகைய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டங்களை ஆயுத மோதல்களின் போது மட்டுமல்லாமல், பல்வேறு அச்சுறுத்தல்களில் இருந்து நாட்டின் எதிர்காலத்தைப் பாதுகாப்பதற்கும் தேவைப்படுவதாக நியாயப்படுத்துகிறார்கள். உண்மையில், அரசியல் மாற்றங்களுக்காக போராடுபவர்கள் மற்றும் நாட்டின் வளர்ச்சிக்கு எதிராக இருக்கும் கொள்கைகளை அகற்றுவதற்குப் போராடுபவர்கள் என்போரும் குறிவைக்கப்படலாம்.

இவற்றைச் சுட்டிக் காட்டுவதிலிருந்து நான் சொல்ல வருவது என்னவென்றால், அரச அதிகாரத் துஷ்பிரயோகம் என்பது PTA போன்ற அசாதாரண சட்டங்களை இயற்றுவதனூடாக மட்டும் நடந்து விடுவதில்லை. மேலும் அத்தகைய அரச அதிகாரத்தை கட்டுப்படுத்துவது சட்ட மாற்றங்களால் மட்டுமே நடந்து விட முடியாது. அரசு அதிகாரத் துஷ்பிரயோகத்தை எதிர்த்து உருவாகும் விவாதங்களும் போராட்டங்களும், மற்றும் அத்தகைய அரச அதிகாரத்தை, கொடூரமான சட்டங்களை உட்பட எதிர்த்து வெளிப்படும் சமூக உணர்வும் இன்னும் முக்கியமானவை.

1970களில் பிரதமர் இந்திரா காந்தியின் அவசர நிலை மூலம் தேர்தல் ஜனநாயகத்தை குழிதோண்டிப் புதைக்க முயற்சித்ததற்கு சமூகத்தில் எழுந்த வலுவான எதிர்ப்பு எதிர்காலத்தில் எந்த ஒரு ஆட்சியும் அவசர காலச் சட்டத்தை கொண்டு வந்து ஆட்சியைத் தொடர முயற்சிப்பது சாத்தியமில்லை என்று ஆக்கியது. இவ்வாறு இந்திய அறிவுஜீவிகள் சொல்வதை நான் கேட்டிருக்கிறேன். அதேபோன்று, எமது அரசியல் கலாசாரத்தில் எவ்வளவு தான் குறைபாடுகள் இருந்தபோதிலும், எமது மக்கள் இராணுவ சதிப்புரட்சிக்கு ஆதரவு அளிக்கவில்லை. வெல்ல முடியாதது என்று கருதப்படும் சக்திவாய்ந்த ஆட்சிகளைக் கூட அவர்கள் மாற்றியிருக்கிறார்கள். இது நமது சமூக உணர்வில் ஆழமாக பதிந்துள்ள ஜனநாயக நெறிமுறையின் பிரதிபலிப்பாகும் என்று நான் நம்புகிறேன்.

புத்திஜீவிகள் மக்களுடன் இணைந்து பயங்கரவாத எதிர்ப்புச் சட்டங்களுக்கு எதிரான கருத்தியல் போராட்டத்தை முன்னெடுப்பதே இன்றைய காலத்தின் கட்டாயம்.

**பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்குவதற்கு போராடும் அதே வேளையில், நமது தேசிய அரசியல் உணர்வில் இருந்து பயங்கரவாத எதிர்ப்புச் சட்டங்கள் திரும்ப வருவதற்கான சாத்தியக்கூறுகளை அகற்றவும் நாம் பணியாற்ற வேண்டும்.**

இன்று பயங்கரவாத தடைச்சட்டத்தை மக்கள் நிராகரிப்பது தற்போதைய மற்றும் எதிர்காலத்தில் ஆட்சிக்கு வரும் ஆட்சிகளுக்கு மிகவும் தெளிவாக்கப்பட வேண்டும்.

**"ஈழத் தமிழர் தேசிய இனப் பிரச்சினைக்கான தீர்வும் தேசிய, பிராந்திய, சர்வதேச நிலவரங்களும்" எனும் தொனிப் பொருளிலான கருத்தரங்கு கடந்த 16.02.2022 அன்று யாழ்ப்பாணத்தில் உள்ள நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில் இடம் பெற்றது. அதில் பங்கேற்று அரசியல் ஆய்வாளர் நிலாந்தன் ஆற்றிய உரை வருமாறு.**

# ஈழத் தமிழர்

## தேசிய இனப் பிரச்சினைக்கான தீர்வும் தேசிய, பிராந்திய, சர்வதேச நிலவரங்களும்



எமது சனத்தொகையில் கிட்டத்தட்ட மூன்றில் ஒரு பகுதி புலம் பெயர்ந்து விட்டது. இப்படிப் பார்த்தால் பூமியின் எல்லாப் பாகங்களிலும் நாங்கள் சிதறடிக்கப்பட்டிருக்கிறோம். யாதும் ஊரே யாவரும் கேளீர். நாங்கள் யாதும் ஊராகப் போனோம். ஆனால் எங்களுக்கு யாவரும் கேளீரா? யாவரும் எங்களுக்கு கேளீர் என்றால் 2009 ஆம் ஆண்டு நந்திக் கடற்கரையில் நாம் ஏன் தனித்து விடப்பட்டோம். எங்களுக்காக தமிழகத்தில் 19 பேர் இதுவரை தீக்குளித்திருக்கிறார்கள். 8 கோடித் தமிழ் மக்கள் எங்களுக்கு அருகே இருக்கிறார்கள். மொழியால் இனத்தால் பண்பாட்டால் இன்னபிறவால் எங்களுக்கும் அவர்களுக்கும் இடையிலே பிணைப்பு உண்டு. ஆனால், கடைசிக் கட்டப் போரில் நாங்கள் தனித்து விடப்பட்டோம். ஏன்? யாதும் ஊராகப் போனோம். ஆனால் ஏன் எங்களுக்கு யாவரும் கேளீர் என்ற நிலை வரவில்லை? ஏன் எங்களுக்கு நண்பர்கள் இல்லாமல் போனார்கள்?

நண்பர்கள் இருந்திருந்தால் நாங்கள் அந்த இடத்தில் காப்பாற்றப்பட்டிருப்போம். புலம்பெயர்ந்த தமிழர்கள் தாங்கள் வாழும் எல்லா இடங்களிலும் தெருக்களில் இறங்கிப் போராடினார்கள். கனடாவின் பிரதான வீதியையே கனடாவின் வரலாற்றிலேயே சில மணி நேரங்களுக்கு முடக்கினார்கள். ஆனால் அந்தப் போராட்டங்கள் எவையும் தீர்மானங்களை மாற்ற போதுமானதாக இருக்கவில்லை. நாங்கள் யாதும் ஊராகப் போனோம். ஆனால் எங்களுக்கு ஏன் யாவரும் கேளீர் அல்ல? இந்தக் கேள்வியை தமிழ் மக்கள் தங்களைத் தாங்களே கேட்டுக் கொள்ள வேண்டும்.

கிட்டத்தட்ட ஒரு நூற்றாண்டுக்கு மேலாக தமிழ் மக்கள் தோற்றுக் கொண்டிருக்கிறார்கள். ஆயுதப் போராட்டத்துக்கு முந்திய மிதவாத அரசியல் பின் ஆயுதப் போராட்டம் அதற்குப் பின்னரான கடந்த 12 ஆண்டுகள். பேராசிரியர் யூட் லால் கூறுவது போல கடந்த 12 ஆண்டுகளில் தமிழ்மக்கள் குறிப்பிட்டு சொல்லத்தக்க வெற்றி எதையுமே பெற தவறி இருக்கிறார்கள். கிட்டத்தட்ட ஒரு நூற்றாண்டுக்கு மேலாக தமிழ் மக்கள் தங்கள் அரசியல் இலக்குகளை அடைவதற்காக போராடுகிறார்கள். ஆனால் அவர்கள் தங்கள் அரசியல் இலக்குகளை அடைய முடியவில்லை. ஏன்? என்ன நடந்தது? ஒரு நூற்றாண்டுக்கு மேலாக தோற்றுக் கொண்டிருக்கிறோம். எங்கள் கனவுகளை அடைய முடியாமல் இருப்பதற்கு காரணம் என்ன? இப்போது ஆயுதப் போராட்டத்தின் விளைவாக உலகம் முழுக்கப் பரந்து போயுள்ளோம். ஏன் எங்களுக்கு நண்பர்கள் குறைவாக இருக்கிறார்கள்? அல்லது இருக்கிற நண்பர்களை ஒரு திண்ம சக்தியாக மாற்ற எங்களால் முடியாமல் இருக்கிறதா? ஆம், தமிழ் மக்கள் தங்களைத் தாங்களே இந்தக் கேள்வியைக் கேட்க வேண்டும்.

கடைசிக் கட்டப் போரில் நந்திக் கடற்கரையில் வணங்கா மண் கப்பல் வரும் என்றார்கள். காத்திருந்தார்கள். ஐ.நா வரும் என்றார்கள். காத்திருந்தார்கள். ஒன்றும் வரவில்லை. கடைசியில் நிர்வாணமாக கைகளை தூக்கிக் கொண்டு வட்டுவாகல் வாசலில் நடந்த போது மரணம் வாயைப் பிளந்து கொண்டு வரவேற்றது. சரணடைந்தார்கள். தமிழ் மக்கள் இவ்வளவு நண்பர்களை கொண்டிருந்தால் ஏன் அப்படித் தோற்க வேண்டும். ஒரே ஒரு காரணத்தை தான் சொல்ல முடியும். அடிப்படைக் காரணம். நாங்கள் ஓர் அரசற்ற மக்கள். அப்படி இருப்பதனால் தான் எங்கள் வளங்களை ஒன்று திரட்ட முடியவில்லை. இடைப்பட்ட காலத்தில் எங்களிடம் ஓர் கருநிலை அரசு இருந்தது. போத்துக்கீசர் வர முன்னுக்கும் எங்களிடம் அரசு இருந்தது. இப்போது இல்லை. எங்களிடம் கருநிலை அரசு இருந்த காலகட்டத்தில் எங்களிடம் கொஞ்ச கட்டமைப்புக்கள் இருந்தன. இப்போது ஒன்றும் இல்லை.

ஒரு அரசுடைய தரப்பு இன்னொரு அரசுடைய தரப்பை அணுகும் போது, அங்கு கட்டமைப்புக்கும் கட்டமைப்புக்கும் இடையிலான கட்டமைப்பு சார் உறவு இருக்கும். அரசாங்கம் மாறினாலும் அந்தக் கட்டமைப்பு தொடர்ந்து இயங்கிக் கொண்டே இருக்கும். அரசுகளுக்கும் அரசுகளுக்கும் இடையிலான உறவு என்பது அரசுகளைப் பாதுகாக்கும் நோக்கிலானது. அது எல்லா விதத்திலும் நெருக்கடிகளின் போது அரசுகளைப் பாதுகாக்கும். இப்போது இலங்கை அரசுக்கு வந்திருக்கும் பொருளாதார நெருக்கடியில் அரசுக்கும் அரசுக்கும் இடையிலான அந்தக் கட்டமைப்பு சார் உறவு தான் அவர்களை தூக்கிப் பிடிக்கிறது. அந்தக் கட்டமைப்பு சார் உறவின் அடிப்படையில் தான் எல்லா நாடுகளும் அவர்களுக்கு உதவி வருகின்றன. ஆனால் தமிழ் மக்கள் ஒரு அரசுடைய தரப்பு அல்ல. எங்களிடம் அதற்கு தேவையான கட்டமைப்பு கிடையாது. இது தான் பிரச்சினை. இந்த கட்டமைப்பு இல்லாத காரணத்தினால் நாங்கள் எங்களுக்கு கிடைத்த வளங்களை ஒருங்கிணைக்க முடியாத மக்களாகவும், ஒரு திண்ம சக்தியாக, தூல சக்தியாக மாற்ற முடியாத மக்களாகவும் பலதசாப்த காலங்களாக காணப்படுகின்றோம். ஆனால் அரசுக்கும் அரசுக்கும் இடையிலான உறவு என்ற அடிப்படையில் தென்னிலங்கையில் இருக்கும் அரசாங்கங்கள் வெற்றிகரமாக வெளியுறவுகளை அணுகக் கூடியதாக இருக்கிறது.

ஒரு சின்ன உதாரணம் தமிழ் மக்கள் மத்தியில் 2009 க்குப் பின் இந்துத்துவ நிலைப்பாட்டை எடுத்து பா.ஜ.க வை அணுகுவதற்கு ஒரு தரப்பு முயற்சித்தது. இந்துக்கள் அதிகமாக கொல்லப்பட்டார்கள், இந்துக் கோவில்கள் அதிகமாக அழிக்கப்பட்டன, என்று கூறி இரண்டாவது வட்டுக்கோட்டைத் தீர்மானத்தை ஒரு தரப்பு நிறைவேற்றியது. தமிழகத்தில் இருக்கும் சட்டமன்ற உறுப்பினர் திருமதி வானதி சிறீனிவாசன் ஊடாக இந்துக்கள் பாதிக்கப்படுகின்றார்கள் என்ற அடிப்படையில் இந்திய அரசாங்கத்தை அணுகுவதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டன. ஆனால், இலங்கை அரசாங்கம் அமைச்சரவை அந்தஸ்தோடு ஒரு தூதுவரை டெல்லிக்கு அனுப்பியது. அவர் போன வேகத்திலேயே இரண்டு ஆண்டுகளுக்கான மூலோபாய திட்டங்களை வகுத்தார். சில வாரங்களுக்கு முன் அவர் RSS தலைவர்களோடு கைகுலுக்கிக் கொண்டு நிற்க காணப்பட்டார். அரசுக்கும் அரசுக்கும் இடையிலான உறவின் மூலம் அவர்கள் கெட்டித்தனமாக பௌத்தத்துக்கும் இந்துத்துவாக்கும் இடையில் தொடர்பை ஏற்படுத்தப் பார்க்கின்றார்கள்.

ஆனால் அரசற்ற தரப்பான தமிழ் மக்களின் முயற்சிகள் பிரகடனங்களும் கற்பனைகளுமாக எதுவும் செயலுக்குப் போகாத ஆசைகளாகவே இருக்கின்றன. இன்னுமொரு உதாரணம், புலம்பெயர்ந்த தமிழர்கள் ஜெனீவாவில் தங்கள் முழு சக்தியையும் திரட்டி எதையோ செய்யப் பார்க்கின்றார்கள். அந்தக் குளிருக்குள்ளும் காத்திருந்து போராடுகின்றார்கள். ஆனால் ஒரு அரசற்ற தரப்பு என்ற அடிப்படையில் ஜெனீவா தீர்மானங்களின் மீது அவர்கள் செல்வாக்கு செலுத்த முடியாதவர்களாக இருக்கிறார்கள். இன்னும் சரியான வார்த்தைகளில் சொன்னால் அவர்கள் புலம்பெயர்ந்து வாழும் நாடுகளில் உள்ள மூலோபாய சமூகங்களின் மீது தாக்கம் செலுத்த முடியாத மக்களாக காணப்படுகின்றார்கள். கனடாவில் வாழும் சீக்கிய மக்கள் கனேடிய அரசில் தாக்கம் செலுத்தும் வளர்ச்சிக்கு வந்து விட்டார்கள். அமெரிக்காவில் வாழும் யூத மக்கள், ஐரிஷ் மக்கள் அந்த வளர்ச்சியை அடைந்து விட்டார்கள். இதன் விளைவு தான் யூத தேசம், ஐரிஷ் தேசம். ஆனால் தமிழ்மக்கள்

உலகம் முழுக்க பரந்து போய் விட்டார்கள். எல்லா அரசுகளுக்கும் கிட்டக் கிட்ட நிற்கிறார்கள். ஆனால், அந்த வளங்கள் ஒன்றுதிரட்டப்படவில்லை. அவை திண்ம சக்திகளாக்கப்படவில்லை. ஆங்கிலத்தில் சொல்வார்கள் mass force ஆக்கப்படவில்லை.

தமிழகத்தை கையாளும் விடயத்திலும் இது தான். எங்களுக்காக 19 பேர் தீக்குளித்திருக்கிறார்கள். தமிழகத்தில் இருக்கும் ஈழ ஆதரவு சக்தியை ஒரு திண்ம சக்தியாக மாற்ற எங்களிடம் வேலைத் திட்டங்கள் கிடையாது. உரிய கட்டமைப்புக்களும் கிடையாது. இன்னுமொரு உதாரணம், கடந்த ஆண்டு பங்குனி மாத ஜெனீவா அமர்வின் போது ஒரு விடயம் பரிந்துரைக்கப்பட்டது. சான்றுகளை திரட்டுவதற்கான ஒரு கட்டமைப்பு உருவாக்கப்படும் என்பதே அது. கடந்த தை மாதம் மூன்று கட்சிகளும் இணைந்து ஐ.நாவுக்கு அனுப்பிய கூட்டுக் கடிதத்தில் கேட்டிருந்த சான்றுகளைத் திரட்டும் பொறிமுறையை ஒத்தது அல்ல அது. ஆனாலும் ஒன்று வந்தது. அந்த பொறிமுறை கடந்த ஜெனீவா தீர்மானத்தில் நிறைவேற்றப்பட்டது. அதன் பின் ஜெனீவா மனித உரிமைகள் ஆணையாளர் கடந்த புரட்டாதி மாத தன்னுடைய வாய் மூல அறிக்கையிலே அந்தக் கட்டமைப்பு கடந்த ஐப்பசி மாதத்தில் இருந்து இயங்கத் தொடங்கும் என்று சொல்லி இருந்தார். அதற்கு வேண்டிய நிதியை அவுஸ்திரேலியாவும், பிரிட்டனும் வழங்கும் என்று கூறப்பட்டது. ஆனால் அண்மையில் வெளிவந்த ஐ.நா மனிதவுரிமைகள் ஆணையகத்தின் இலங்கைக்கான ஆண்டறிக்கையில் இந்த விவகாரங்கள் நிதி நெருக்கடி காரணமாக மட்டுப்படுத்தப்படுகின்றன என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஊர்ஜிதமற்ற செய்திகளின் படி அதற்கு ஒதுக்கப்படும் நிதியை 40 வீதத்தால் குறைக்குமாறு சீனா வலியுறுத்தி இருக்கின்றது. அதன் விளைவாக முதலில் 13 நிபுணர்களைக் கொண்ட குழு என்று கூறப்பட்டு இப்போது 8 நிபுணர்களாக அது குறைந்து விட்டது.

அரசுக்கும் அரசுக்கும் இடையிலான அந்த உறவின் பிரகாரம் அவர்கள் கெட்டித்தனமாக ஐ.நாவின் செயற்பாடுகளின் மீது தாக்கம் செலுத்தக் கூடியதாக இருக்கின்றது. இப்போது ஒரு சித்திரம் தெளிவாக தெரிகிறது. கடந்த ஒரு நூற்றாண்டுக்கும் மேலாக தமிழ் மக்கள் தோற்றுக் கொண்டிருக்கின்றார்கள். ஆனால் எல்லா இடங்களிலும் எல்லா வளங்களும் இருக்கிறது. ஆனால் ஒன்றையும் ஒருங்கிணைக்க முடியாமல் இருக்கிறோம். ஏனென்றால் நாங்கள் ஒரு அரசற்ற தரப்பாக இருப்பதே அடிப்படைப் பலவீனம். இதற்குள் இன்னொரு பலவீனமும் இருக்கிறது. எங்களிடம் இருந்த கருநிலை அரசு அழிக்கப்பட்ட பின் கடந்த 12 ஆண்டுகளாக ஒரு தேசமாக சிந்தித்து அந்த தேசத்துக்குரிய கட்டுமானங்களை கட்டியெழுப்ப தவறி விட்டோம். கட்சிகளைக் கட்டி எழுப்பி இருக்கிறோம். தேசத்தை கட்டியெழுப்பவில்லை. ஒவ்வொரு அரசியல்வாதியும் தன் ஆதரவு வட்டத்தை கட்டி எழுப்புகிறார். ஒரே கூட்டுக்குள் இருந்து கொண்டு வெவ்வேறு கூட்டுகள் புறப்படுகின்றன. ஒரே கூட்டுக்குள் இருந்து கொண்டு வெவ்வேறு கடிதங்கள் ஜெனீவாவுக்குப் போகின்றன. ஒரே கூட்டுக்குள் இருந்து கொண்டு தூதர்களை வெவ்வேறாக சந்திக்கிறோம். தூதரக அதிகாரிகள் எங்களை எப்படிப் பார்ப்பார்கள்? கடந்த 12 ஆண்டுகளாக கட்சிகள் உடைந்து கொண்டே போகின்றன. நாங்கள் அவிழ்த்து விடப்பட்ட பாக்கு மூட்டைகள் போல சிதறிக் கொண்டே போகின்றோம். அடுத்த தேர்தலில் இன்னொரு உடைவு காத்திருக்கிறது. புதிதாக உருவாகி இருக்கும் ஐந்து கட்சிகளின் கூட்டு என்பது அந்த உடைவைத் தான் கட்டியம் கூறுகின்றது. தமிழ் மக்கள் தொடர்ந்தும் சிதறிக் கொண்டே போகின்றார்கள்.

ஒருபக்கம் நாங்கள் புலம்பெயர்ந்து போனோம். புலப்பெயர்ச்சி எங்கள் சனத்தொகையை நீர்த்துப் போக செய்து விட்டது. இனப்படுகொலை எங்கள் சனத்தொகையை நீர்த்துப் போக செய்து விட்டது. இப்போது சனத்தொகைப் பெருக்க வீதமும் குறைந்து விட்டது. எல்லா வீடுகளிலும் பிள்ளைப் பேறு வீதம் குறைந்து கொண்டே போகிறது. வெளிநாடுகளிலும் இதே நிலை தான். பிள்ளைகள் ஒன்று அல்லது இரண்டு தான். எங்களது சனத்தொகை, பிள்ளைப்பேறு வீதம் குறைந்து கொண்டே போகிறது. இப்படியே போனால் இலங்கைத்தீவின் முதலாவது சிறிய தேசிய இனமாக நாங்கள் மாறி விடுவோம். இரண்டாவதாக இருப்பது எங்களை முந்திக் கொண்டு வந்துவிடும். சனமும் சிறுத்து நிலமும் சிறுத்து சனமும் சிதறி கொல்லப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டு மிகவும் பலவீனமுற்று இருக்கிறோம். சிதறடிக்கப்பட்டு இருக்கிறோம். இப்படிப்பட்டதொரு நேரத்தில் நாங்கள் யாரை நம்ப

லாம். யாரை நம்பக் கூடாது. நம்ப நட. நம்பி நடவாதே. நாங்கள் எல்லோரையும் நண்பர்களாக் குவோம். நாங்கள் ஒரு சிறிய மக்கள் கூட்டம். பெரிய நண்பர்களை சம்பாதிப்போம் என மு.திரு நாவுக்கரசு அடிக்கடி சொல்வார். செயலுக்கு போகும் இணைப்புகளை (alliance) உருவாக்க வேண்டும். பெரிய பெரிய பேரரசுகளே அவ்வாறான கூட்டுக்களை உருவாக்குகின்றன.

உலகின் முதன்மைப் பேரரசு அமெரிக்கா மத்திய பால்கன் (Balkan) பிரதேசத்தில் தான் பலவீனம் என்று கண்டு ரஷ்யப் பேரரசு மீள எழக் கூடாது என்பதற்காக நேட்டோவை விரிவாக்கியது. அதன் விளைவாக இன்றைக்கு ஒரு யுத்தம் மூண்டிருக்கிறது. பால்கன் பிரதேசத்தில் உக்ரைன் யோர்ஜியா உள்ளிட்ட லத்வியா லிதுவேனியா போன்ற எல்லா நாடுகளும் ஏதோ ஒரு இணைப்புக்கு போக முயற்சிக்கின்றன. போய் விட்டன. அவை நேட்டோவுக்குள் இணைகின்றன. ஏதோ ஒரு கூட்டுக்குள் வர முயற்சிக்கின்றார்கள். அதன் சரி பிழையை நாங்கள் வேறொரு கட்டத்தில் பார்க்கலாம். உக்ரைன் அப்படியொரு கூட்டுக்கு போகப் போகிறது என்று கண்டு தான் ரஷ்யா அடிக்கத் தொடங்கியது.

சீனா தன்னிறைவு கண்டு விட்டது. அதன் கொள்ளளவு நிரம்பி விட்டது. அதன் உற்பத்திகளை வெளியில் விற்க வேண்டும். சந்தை தேவை. அதே நேரத்தில் புதிய உற்பத்திக்கு வளம் தேவை. அதற்கும் பாதையை போட வேண்டும். சீனா தன் பிராந்தியத்துக்கு வெளியே வருகின்றது. ஆசிய ஆபிரிக்க நாடுகளை நோக்கி விரிவாக்கி வருகின்றது. அது இந்தியாவினுடைய செல்வாக்கு மண்டலத்துக்குள் (sphere of influence) நுழைந்து விட்டது. ஒவ்வொரு பெரிய நாட்டுக்கும் ஒரு செல்வாக்கு மண்டலம் இருக்கும். ரஷ்யாவின் செல்வாக்கு மண்டலத்துக்குள் அமெரிக்கா நுழைய முற்பட்டதனால் தான் உக்ரைன் அடிவாங்குகிறது. ரஷ்யாவின் செல்வாக்கு மண்டலத்துக்குள் தன்னை பலப்படுத்த வேண்டும் என்பதற்காகத் தான் அமெரிக்கா உக்ரைனை நேட்டோவுக்குள் கொண்டு வர முயற்சிக்கிறது. ஏற்கனவே லத்வியா, லிதுவேனியா போன்ற நாடுகளை கொண்டு வந்து விட்டது.

சீனா தன் பிராந்தியத்துக்கு வெளியே விரிவடைவதனை தடுக்க வேண்டும் என்பதற்காக அமெரிக்க இந்தியப் பேரரசுகள் இணைந்து இந்தோ–பசுபிக் திட்டத்தை (Indo-Pacific strategy) போடுகிறார்கள். பிறகு குவாட் (quad) என்று வருகிறார்கள். இன்னும் இன்னும் புதிய கூட்டுக்களை உருவாக்குகிறார்கள். பெரிய பெரிய நாடுகளே, பேரரசுகளே செயலுக்குப் போகும் இணைப்புக்களை ஏற்படுத்தி கூட்டுக்களை உருவாக்கும் போது மிகச் சிறிய மக்கள் கூட்டமான நாங்கள் ஏன் அவ்வாறான நட்பு சக்திகளை திரட்ட முடியாமல் இருக்கிறோம். ஏற்கனவே சிதைந்து போன சிதறடிக்கப்பட்ட குட்டியான மக்கள் கூட்டமான நாங்கள் உலகம் முழுக்கப் பரந்திருக்கிறோம். ஆனால் ஒருவர் கூட நண்பர் இல்லை. ஏன்? நாங்கள் கூட்டுக்களை உருவாக்க வேண்டும். கூட்டுக்களை உருவாக்கினால் தான் பெரிய பெரிய அரசுகளை நட்பாக்கிக் கொண்டால் தான் எங்களுடைய பேரம் அதிகரிக்கும். கூட்டுக்களை உருவாக்கிக் கொள்ளல் என்பது உள்ளுக்குள் இருந்து தொடங்க வேண்டும். முதலில் நாங்கள் எங்களுடைய தாயகப் பரப்பில் சக கட்சிகளோடு கூட்டுக்களை வைத்துக் கொள்ள வேண்டும். பக்கத்தில் இருக்கும் ஒரு கட்சியோடு என்னால் விசுவாசமாக பழக முடியவில்லை என்றால் எப்படி ஒரு வெளிநாட்டோடு நான் விசுவாசமாக பழகப் போகின்றேன். அருகிலிருக்கும் சக கட்சியோடு என்னால் ஒரு கூட்டுக்குப் போக முடியவில்லை என்று சொன்னால் ஒரு கூட்டை விசுவாசமாக பேண முடியவில்லை என்று சொன்னால் வெளிநாடுகளை நாங்கள் எப்படிக் கையாளப் போகிறோம்? எப்படி கூட்டு வைக்கப் போகிறோம்?

உலக அரசியலில் புனிதமான கூட்டு என்று எதுவும் கிடையாது. புனிதமான யுத்தம் என்றும் எதுவும் கிடையாது. அரசியலில் எதுவுமே புனிதமானது இல்லை. எல்லாமே நலன்சார் உறவுதான். எல்லாமே தந்திரோபாய உறவு தான். மஹிந்த ராஜபக்ச முதலில் ஆட்சிக்கு வந்த போது ஜே.வி.பியோடு இணைந்தார். பிறகு கழட்டி விட்டார். பிறகு யார் யாரையே சேர்த்துக் கொண்டு மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்றார். இப்போது அவர்களையும் கழட்டி விட்டு விட்டார். தேர்தல் மைய அரசியலில் தந்திரோபாயக் கூட்டுக்களும் சூழ்ச்சிக் கூட்டுக்களும் சகஜம். திருமதி சந்திரிக்காவின் கண் முன்னால் அவரது கணவரை சுட்டது ஜே.வி.பி. ஆனால் ஒரு கட்டத்

தில் சந்திரிக்கா அவர்களோடும் இணைப்புக்கு போனார். தேர்தல் மைய அரசியல் அப்படித்தா னிருக்கும். ஆயுதப் போராட்ட அரசியலிலும் கூட அவ்வாறான இணைப்புகள் ஏற்பட்டிருக்கின்றன. தமிழ்மக்கள் தந்திரோபாயக் கூட்டுக்களுக்கும் சமயோசித கூட்டுக்களுக்கும் தீர்க்க தரிசனம் மிக்க கூட்டுக்களுக்கும் போக வேண்டிய ஒரு கட்டம் இது. இல்லையென்றால் தனித்துப் போய்விடுவோம்.

எங்களுக்கு பொருத்தமில்லாத தீர்வை திணிக்கும் சக்திகளோடு நாங்கள் எப்படி நேசமாக இருப்பது என்கிற கேள்வி வரும். ஆனால் இருக்கலாம். அதற்குப் பெயர் தான் சத்திய தந்திரம். மகாபாரதத் தில் கிருஷ்ணர் செய்தது முழுக்க தந்திரம் தான். தமிழ் மக்கள் மத்தியில் தோன்றிய ஒரு முக்கியமான சிந் தனையாளர் மு. தளையசிங்கம் புங்குடுதீவில் பிறந்தார். அவர் எப்போதும் சொல்வார் சத்திய தந் திரம் என்று. மகாபாரதம் முழுக்க கிருஷ்ணர் தந்திரம் செய்கிறார். கிருஷ்ணரின் தந்திரம் இல்லையென்றால் பாண்டவர்கள் வென்றிருக்கவே முடியாது. கிருஷ்ணர் யுத்தத்துக்கு நாள் குறித்ததில் இருந்து கர்ணனை நிராயுதபாணியாக மாற்றியது வரையிலும் தந்திரம் தான். மகாபாரதத்தை கிருஷ்ணரின் நோக்கு நிலையில் சொன்னால் அது கிருஷ்ண தந்திரம். தந்திரம் இல்லாமல் அரசியல் இல்லை.

தமிழ்மக்கள் தங்கள் பக்கம் சத்தியம் இருக்கிற தென்று கருதினால் சத்திய தந்திரத்துக்குப் போங்கள். சத்திய தந்திரம் என்பது நீங்கள் உங்கள் கொள்கை களை விட்டுக் கொடுப்பது அல்ல. தமிழ்மக்கள் தங்கள் கொள்கைகளை விட்டுக் கொடுத்து கூட்டுக்கு போக வேண்டிய தேவையில்லை. அண்மையில் தமி ழக முதல்வர் ஸ்ராலினின் நூல் வெளியீட்டு விழாவு க்கு திரு ராகுல் காந்தி வந்திருந்தார். அவர் ஆற்றிய உரையின் ஒரு பகுதி இது, 'என் இரத்தம் இந்த மண்ணில் கலந்திருக்கிறது. நான் என்னை தமிழனாக உணர்கிறேன். இந்த மண்ணுக்கு வரும் போது பணி வோடு வருகிறேன். இந்த மண்ணின் மொழி வரலா ற்றைப் புரிந்து கொள்ள முயற்சிக்கிறேன். அத னால் தான் இந்தியாவை ஒன்றியம் என்கிறேன். மூன்று ஆயிரம் ஆண்டுகளாக தமிழக மக்கள் மீது எதையும் திணிக்க முடிந்ததில்லை. இதுதான் தமிழகத்தின் வரலாறு'.

இதுதான் ஈழத்தின் வரலாறும். மூன்று ஆயிரம் ஆண்டுகளாக தமிழகத்தின் மீது எதனையும் திணி க்க முடிந்ததில்லை. நாங்களும் தமிழகமும் கடலால் தான் பிரிக்கப்பட்டு இருக்கின்றோம். பண்பாட்டால் மொழியால் இனத்தால் இன்னபிறவால் ஒன்று. தமி ழகம் இல்லாமல் ஈழப்போர் முதற்கட்ட வளர்ச்சியை அடைந்திருக்கவே முடியாது. தமிழகத்தை நோக்கி திரு ராகுல்காந்தி கூறியது எங்களுக்கும் பொருந் துவது மட்டுமல்ல அண்மை தசாப்தங்களில் அதனை இரத்தமும் சதையுமாக நிரூபித்த மக்கள் நாங்கள். எனவே எங்கள் கோரிக்கை இது தான். விட்டுக் கொடுக்க மாட்டோம் என்று சொல்லிக் கொண்டே பிற நாடுகளோடும் பிற இனங்க ளோடும், பிற மக்கள் கூட்டங்களோடும் பிற நிறுவ னங்களோடும் கண்ணியமான உறவுகளை வைத் துக் கொள்ளலாம். ஒரு சிறிய இனம் எவ்வாறு பெரிய அரசுகளின் மத்தியில் நின்று பிடிப்பது என்கிற கேள்வி வரும். அது உண்மை. பெரிய அரசுகள் எப்போதும் தாங்கள் செய்கின்ற காரியத்துக்கு ஒரு காரணத்தை தேடும். சின்ன பிள்ளைகளாக இருக்கும் போது ஒரு கதை படித்திருப்போம். ஒரு ஆட்டுக் குட்டி தண்ணீர் குடிக்க ஆற்றங்கரைக்கு வரும். ஆற்றின் மறு பக்கத்தில் ஓநாய் நிற்கும். ஓநாய் சொல்லும் நீ தானே போன வருடம் என்னைப் பார்த்து பரிகசித்தது. ஆட்டுக் குட்டி சொல்லும், இல்லை. போன வருடம் நான் பிறந்தே இருக்கவில்லை. அப்படியென்றால் அது உன் அம்மாவாக இருக்கும் என்று சொல்லிப் போட்டு ஓநாய் ஆட்டுக் குட்டியை சாப்பிட்டது. அதே போல் தான் பெரிய அரசுகளும் ஏதாவது செய்ய விரும்பி னால் அதற்குரிய காரணத்தை கற்பிக்கும். அமெரிக்கா ஈராக்குக்குள் வரும் போது அப்படித்தான் காரணத்தை கற்பித்தது.

உலகப் போருக்கு பின்னரான கடந்த சில தாசாப்தங் களாக அது தான் நடக்கிறது. முன்கூட்டிய தற்காப்பு தாக்குதல்கள். அதனைத் தான் இன்று ரஷ்யாவும் செய்கிறது. பெரிய அரசுகள் அதற்கு காரணங்களை யும் காட்டும். தன்னுடைய செல்வாக்கு மண்ட லத்தை மீறி நேட்டோ விரிவாக்கம் அடைவதனை தடுப்பது தான் ரஷ்யாவின் நோக்கம். அது தவிர வேறு நோக்கங்களும் உண்டு. எனவே பெரிய அரசுகள் தங்களுடைய நோக்கு நிலைகளில்

இருந்தே தீர்வுகளை தரும். ஐ.நாவிலும் கடந்த 12 ஆண்டுகளாக அதுதான் நிலைமை. ஐ.நா எங்களுக்கு தீர்வைத் தரவில்லை. 2015 ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் நிறைவேற்றப்பட்ட 30/1 தீர்மானம் பொறுப்புக் கூறலுக்கானது. ஆனால், நிலை மாறு கால நீதி என்பது இலங்கைத்தீவைப் பொறுத்தவரையிலும் ஓர் அழகிய பொய்யாக மாறியது. அது எதிர்மறை விளைவை தந்த படியால் தான் மூன்றில் இரண்டு பெரும்பான்மையால் தனிச்சிங்கள வாக்குகளால் வெல்ல வேண்டும் என்ற நிலைக்கு மொட்டுக் கட்சி போனது. தென்னிலங்கையில் யார் ஆளவேண்டும் என்பதனை தமிழ் மக்களோ முஸ்லீம் மக்களோ தீர்மானிக்கும் நிலை இருக்கின்றது என்பதை 2018 ஆம் ஆண்டு நடந்த ஆட்சிமாற்ற சதியின் தோல்வி காட்டியது.

எனவே இனி வரக் கூடிய எந்த அரசாங்கமும் தமிழ் முஸ்லீம் மக்களால் தீர்மானிக்கப்படும் அரசாக இருக்க கூடாது என்று முடிவெடுத்து தனிச் சிங்கள வாக்குகளை கேட்டு வந்தார்கள். அது நிலைமாறு கால நீதியின் நேரடி விளைவு. தமிழ்மக்களுக்கு ஐ.நா தீர்வை தருமென்று காத்திருக்க முடியாது. பெரிய அரசுகள் எப்போதும் தங்கள் நோக்கு நிலையில் இருந்து தான் தமிழ்மக்களை அணுகும். ஆனால் தமிழ் மக்கள் ராகுல் காந்தி சொன்னதை நிரூபிக்கலாம். தங்கள் நோக்கு நிலைகளில் விட்டுக் கொடுப்பின்றி கண்ணியமான உறவுகளை வெளி அரசுகளோடு பேணலாம். விட்டுக் கொடுக்காது தொடர்ந்து போராடி தங்கள் உச்சமான இலக்குகளை அடையலாம். பிராந்திய பூகோள அரசியல் நிலைமைகளில் சாதகமாக நிலைமைகள் வரும் போது தமிழ்மக்கள் தங்கள் இலக்குகளை நோக்கி நகரலாம். அதற்கு தமிழ்மக்கள் முதலில் செய்ய வேண்டியது சக கட்சிகளோடு ஒரு ஐக்கியத்துக்குப் போவது, தமிழ்மக்களுக்கு இப்போது தேவையாக இருப்பது ஒரு புதிய அரசியல் பண்பாடு.

ஆயுதப் போராட்டத்துக்கு பின்னரான எல்லா சமூகங்களிலும் அது உண்டு. எதியோப்பியாவில், எரித்திரியாவில், கிழக்குத் தீமோரில், வட அயர்லாந்தில் அது இருந்தது. அங்கெல்லாம் போராடிய இனங்கள் வெற்றி பெற்றன. அதன் பின் அந்த பண்புருமாற்றம் சாத்தியமாக இருந்தது. ஈழத்தமிழர்களின் நிலை

**“கடந்த ஒரு நூற்றாண்டுக்கும் மேலாக தமிழ் மக்கள் தோற்றுக் கொண்டிருக்கின்றார்கள். ஆனால் எல்லா இடங்களிலும் எல்லா வளங்களும் இருக்கிறது. ஆனால் ஒன்றையும் ஒருங்கிணைக்க முடியாமல் இருக்கிறோம். ஏனென்றால் நாங்கள் ஒரு அரசற்ற தரப்பாக இருப்பதே அடிப்படைப் பலவீனம்”**

அதுவல்ல. ஈழத்தமிழர்கள் யுத்தத்தில் தோற்கடிக்கப்பட்டிருக்கிறார்கள். ஈழத்தமிழர்களுக்கு இன்று வரையிலும் அரசியல் தீர்வு இல்லை. ஒடுக்குமுறை பண்பு மாற்றம் இன்றி அப்படியே காணப்படுகின்றது. தோற்ற இனம் ஒரு பண்புரு மாற்றத்துக்கு எப்படிப் போவது? மண்டேலாவின் உதாரணம் கூட சில நேரங்களில் மாற்றப்பட வேண்டி இருக்கிறது. சிறிய மக்கள் கூட்டமான ஈழத்தமிழர்கள் முதலில் செய்ய வேண்டியது தங்களுக்குள் நண்பர்களை தேடிக் கொள்வது. அடுத்ததாக செய்ய வேண்டியது வெளியே நண்பர்களை திரட்டிக் கொள்வது. தமக்கு வெளியே நண்பர்களை திரட்டிக் கொள்வது நலன்சார்ந்த நட்பாகத் தான் இருக்க முடியும். அன்பு, காதல், பாசம், இனமான உறவு ஒன்றும் வேலைக்குதவாது. அது முழுக்க முழுக்க நலன்சார்ந்த உறவாக தான் இருக்க முடியும். எனவே தந்திரம் பயிலுவோம்.

இதயத்தில் புறாக்களை போல் கபடமில்லாமலும், செயலில் பாம்புகளை போல் தந்திரமாகவும். இருங்கள். ஈழத்தமிழர்கள் தந்திரமாக செயற்பட வேண்டிய காலகட்டம் இது. ராகுல் காந்தி சொன்னது போல மூன்றாயிரம் ஆண்டுகளாக தமிழ்மக்கள் மீது எதையும் திணிக்க முடியவில்லை என்பது தான் வரலாறு.

(03ம் பக்கத் தொடர்ச்சி...)

கைத்தொழில்கள் என்பன முதன்மையாக இருக்கி ன்றன.

எங்களுடைய விவசாயம் ஒரு கட்டத்துக்கு மேல் கைத்தொழில் மயமாக்கத்துக்கு போக முடியாது. ஏனெனில் எங்களுடைய விவசாயிகள் சிறு நில விவசாயிகள். புள்ளிவிபர தகவல்களின் படி எங்கள் விவசாயிகளின் ஆகக் கூடிய நிலப்பரப்பே ஆறு ஏக்கர் தான். மேட்டு நில பயிர் செய்கையாக தென்னந் தோட்டங்கள் என்பவை பெரிய காணிகளாக இருக் கலாம். ஆனால் அவையும் 50 ஏக்கருக்கு கூட இருக்க முடியாது. மறுவகையில் வடபகுதியில் பெரும்பாலும் விவசாயம் செய்பவர்கள் குறிப்பாக மிளகாய் செய்பவர்கள் 1000 கன்று தறை என்பார்கள். இப்ப டியாக முக்கால் பரப்பு, ஒரு பரப்பு, இரு பரப்புக ளில் தோட்டம் செய்பவர்கள் தான். எங்களுடைய விவசாயம் பருவகாலம் சம்பந்தப்பட்டது. எனவே எங்களின் விவசாயத் தொழில்களை நம்பி பாரிய, நடுத்தர கைத்தொழில்களை உருவாக்க முடியாது. ஏனெனில் பருவகால உற்பத்தி முடிந்து விட்டால் அடுத்த பருவ காலத்திற்காக நாங்கள் காத்திருக்க வேண்டும்.

பனைமரங்களை எடுத்துக் கொண்டால், வடக்கில் சுமார் 11 மில்லியன் மரங்கள் இருப்பதாக கணக்கிடப் பட்டுள்ளது. அனாலும் பனையில் பதநீர், பனங்காய் வருவது வேறு வேறு பருவகாலங்களுக்கு, ஓலைகள் வெட்டுவது இன்னொரு பருவகாலத்துக்கு ஆகும். ஆகவே பருவகாலம் தாண்டிய உற்பத்திகளை பனை களை நம்பி வைத்திருக்க முடியாது.

அதே வேளை எங்களுடைய கடற்தொழில் பொருளா தாரத்தை பார்த்தால் எங்களுக்கு அண்மித்ததாக மிகப்பெரிய மீன்பிடித்தள மேடை பருத்தித்துறை யிலிருந்து சுமார் 10 மணி நேரங்கள் இயந்திரப்படகில் பயணம் செய்யும் போது வரக் கூடியதாக இருக்கிறது. Pedro மீன்பிடி தளமேடை என அதனை சொல்வார்கள். அது அதிகளவில் மீன் கருவளம் கொண்டு வளருகின்ற பிரதேசமாகும். பருவகாலம் சார்ந்தது என்றில்லாமல் தொடர்ச்சியாக அங்கே மீன்கள் பெருகிக் கொண்டே இருக்கும். அங்கே சென்று மீன் பிடிப்பதாக இருந் தால் பல நாள் படகுகள் எங்களுக்கு தேவை. சுமார் இரு வாரங்கள் ஒரு மாதமென கடலில் தங்கியிருந்து மீன்களை பிடித்து அங்கே குளிரூட்டியில் இட்டு பதனிட்டு கரைக்கு கொண்டு வரக் கூடிய படகுகள் எங்களுக்கு தேவை. அப்படியான படகுகளை இயக்குவதற்கும் தொழிலை செய்வதற்குமான தொழில் திறன் ஆற்றல்கள் தேவை.

கடந்த 30 ஆண்டு யுத்தமும், இடப்பெயர்வும் எங்கள் மீனவர்கள் மற்றும் பாரம்பரிய கைத்தொழிலாளிகள் மத்தியில் ஒரு மிகப்பெரிய இடைவெளியை உருவா க்கி இருக்கின்றது. இடம்பெயர்ந்த மீனவர்கள் வன்னிப் பகுதியில் நிலப்பரப்பொன்றில் வாழ்ந்ததால் அவர்களின் பிள்ளைகளுக்கு மீனவ தொழில் பற்றிய எந்தவிதமான தொழில் நுணுக்கமும் அனுப வமும் இல்லை. அவர்கள் படித்து வேறு தொழில்களை தேடி செல்கிறார்கள். எனவே பல நாட்கள் கடலில் சென்று இந்த தொழிலை செய்ய அவர்கள் தயாராக இல்லை. தென்னிலங்கையில் இருந்து மீனவர்கள் பலநாள் படகுகளில் முல்லைத்தீவு, பருத்தித்துறை, மயிலிட்டி போன்ற பகுதிகளுக்கு வந்து அங்கிருந்து மீன்வளத்தை அள்ளி செல்கின்றார்கள். மீன்பிடி கைத்தொழிலுக்கான மிகப்பெரிய வாய்ப்பு எங்க ளுக்கு இருக்கின்றது. அப்படி ஒரு மிகப்பெரிய வாய்ப்பிருந்தும் அந்த வாய்ப்பை பயன்படுத்துவதற்கு எங்களிடம் மூலதனம் இல்லை. அந்த தொழிலாற்றல் இல்லை. அதனை ஒருங்கிணைக்கும் நிறுவனங்கள் இல்லை. இதன் காரணமாக நாங்கள் கரையோர ங்களில் மீன்பிடித்தொழிலை செய்கின்றோம். சீவனோபாய தொழிலாகத் தான் எங்களுடைய மீன்பிடித் தொழில் இருக்கிறது.

இத்தகைய நிலைமையில் அன்னியச் செலாவணியை ஈட்டுவதற்கான நோக்கத்தோடு ஊக்குவிக்கப்படும் கடலட்டை, பாசி வளர்ப்பு, இறால் வளர்ப்பு போன்ற வற்றால் சிறு தொழில் முனைவாளர்கள், முதலீட்டா ளர்கள் போதியளவு இலாபத்தை பெற்றுக் கொள் வார்களா என்றால் இல்லை என்பதே என்னு டைய முடிவாக இருக்க முடியும். ஏனெனில் அவர்கள் எந்த முயற்சியை செய்தாலும் வரும் முடிவுப் பொருளை ஒரு நிறுவனத்திடமோ இடைத்தர கரிடமோ கொண்டு போய் கொடுக்க வேண்டும். அந்த நிறுவனம் தான் தன் இறுதி விலையை தீர்மானிக்கும். அதன் பின் அப்பொருளை மிகை

மதிப்பூட்டி சந்தையில் பலமடங்காக விற்கின்ற உரிமை அந்த நிறுவனத்துக்கு தான் இருக்குமே தவிர குறித்த துறையில் ஈடுபடுவர்களுக்கு கிடையாது. யாழ் நகரத்துக்கு அண்மைய பிரதேசங்களில் கடலட்டைத் தொழில் அறிமுகப்படுத்தப்பட்டு கடலுக்கு நடுவே வேலிகளிடப்பட்டு விரைவாக ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. அந்த தொழிலில் எத்தனை பேர் ஈடுபட்டிருக்கின்றார்கள் என்றால் அதில் ஈடுபடுபவர்களில் எத்தனை பேர் பாரம்பரிய மீன்பிடி தொழிலில் ஈடுபட்ட சமூகத்தில் இருந்து வந்தவர்கள் என்று சொன்னால் அந்த எண்ணிக்கை மிகக் குறைவாகவே இருக்கின்றது. இதுவரையும் யாழ்ப்பாண குடாநாட்டில் யாழ்ப்பாண நகரத்தை அண்டியதாக இருந்த மீனவ கிராமங்கள் தங்களுக்கான வாழ்வாதார பொருளாதாரமாக சிறு கடற் தொழிலை செய்து வந்தார்கள். தற்போது அந்த இடங்களில் பெரும்பாலான இடங்கள் அடையாளமிடப்பட்டு கடலட்டை தொழிலுக்காக வேலியிடப்படுகின்றன. எனவே அவர்கள் வழமையான கடற்தொழில் செய்யாமல் கடலட்டை தொழிலுக்காக இடம் விட வேண்டி இருக்கின்றது. கடலட்டை தொழிலில் முதலீடு செய்திருப்பவர்களில் அரைவாசிக்கும் மேற்பட்டவர்கள் பாரம்பரிய மீன்பிடி தொழிலில் ஈடுபடாத வேறு துறையினராவர். எனவே இங்கே என்ன நடக்கிறதென்றால் ஒரு மீனவ சமுதாயம் தங்களது வாழ்வாதாரத்தை இழந்து போகின்றது, இன்னுமொரு தொகுதியினர் அங்கே அத்துமீறல் செய்கின்றார்கள். அதுவும் கூட ஒரு மிகப்பெரிய வினைதிறன் கொண்ட தொழிலாக அமையவில்லை. இது பொருத்தமற்ற ஒரு தெரிவு.

இலங்கைக்கு அந்நிய செலாவணியை கொண்டு வரும் என்பதற்கு அப்பால் அந்த துறையினால் எங்களுக்கு எந்தவித நன்மையும் கிடைக்கப் போவதில்லை. ஆனாலும் தவிர்க்க முடியாமல் அது ஊக்குவிக்கப்படுகின்றது. இந்நிலையில் தான் கைத்தொழில்கள் பற்றி தெளிவான பார்வையொன்று எங்களுக்கு தேவையாக இருக்கிறது. போரின் பின்பு குருநகரில் மீன்பிடி துறைமுகமொன்றை அமைக்கப் போவதாக அரசாங்கம் தீர்மானித்தது. பின்பு சொன்னார்கள் குருநகருக்கு மட்டுமல்ல மன்னாரில் சிலாபத்துறை அதனோடு சேர்ந்து தென்னிலங்கையில் இன்னுமொரு துறைமுகத்தையும் சேர்ந்து

## “கைத்தொழில்கள் பற்றி தெளிவான பார்வை யொன்று எங்களுக்கு தேவையாக இருக்கிறது”

நாங்கள் ஒன்றாக செய்வது நல்லதென கூறி ஆய்வுகள் நடந்தன. அதில் குருநகரை முதலாவதாகவும் சிலாபத்துறையை இரண்டாவதாகவும் தென்னிலங்கையில் உள்ளதை மூன்றாவதாகவும் போட்டு திட்டம் தயாரிக்கப்பட்டது. மூலதன ஒதுக்கீட்டில் 60 வீதம் தென்னிலங்கைக்கான துறைமுகத்துக்கும் 20 – 30 வீதம் சிலாபத்துறைக்கும் மீதி குருநகருக்கும் என்று தான் வந்தது. பின்பு சிலாபத்துறை, குருநகருக்கான அபிவிருத்திகள் முற்றாக கைவிடப்பட்டன.

அதே போன்று மன்னாரின் பேசாலையில் மிகப்பெரிய மீன்பிடித்துறைமுகம் அமைப்பதற்கான திட்டங்கள் தயாரிக்கப்பட்டு இறுதி செய்யப்பட்டு மக்களுடனும் கலந்துரையாடிய போது சிக்கல் எழுந்ததாக திட்ட இணைப்பாளர்கள் கூறி இருந்தனர். பின்பு மக்களால் எழுப்பப்பட்ட நியாயமான சந்தேகங்களுக்கு இவர்களால் பதில் வழங்க முடியவில்லை. பேசாலையில் ஒரு மீன்பிடித்துறைமுகம் அமைக்கப்படுமாக இருந்தால் அது எந்தளவுக்கு உள்ளூர் மீனவர்களின் பொருளாதார நலன்களை பாதுகாக்கும். உள்ளூர் மீனவர்களின் பாவனைக்கும் அப்பால் வேறு பிரதேசங்களில் இருந்து வரக் கூடிய குறிப்பாக தென்னிலங்கையில் இருந்து வரக் கூடிய பலநாள்படகுகள் கொண்டுள்ள மீனவர்களின் ஆதிக்கம் அந்த துறைமுகத்தில் வராதா என்கிற கேள்வி பேசாலை வாழ் மீனவ சமூகத்திடம் எழுந்தது. அதற்கு திட்ட தயாரிப்பாளர்களிடம் பதில் இல்லாத போது அதன் காரணமாக திட்டத்தை கைவிட்டார்கள்.

இப்படியாக தான் இங்குள்ள மக்கள் நலன் சார் அபிவிருத்திகள் உரிய நீண்டகால திட்டமில்லாமல் தயாரிக்கப்பட்டு கைவிடப்படுகின்றன. இந்நிலையில் எங்களுக்கேயான கைத்தொழில் மயமாக்கம் குறித்து தமிழ்மக்கள் சிந்திக்க வேண்டியது அவசியமானது.

24ம் பக்கத் தொடர்ச்சி

சித்திரவதை அல்லது தவறாக நடத்தப்பட்டதாக புகார் செய்யும் எந்தவொரு கைதியையும் அவர் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இடத்திலிருந்து வேறு பாதுகாப்பான இடத்திற்கு மாற்றுவதற்கு நீதிபதி உத்தரவிட வேண்டும் என்று எந்தக் கட்டுப்பாட்டையும் இந்த திருத்தங்கள் விதிக்கவில்லை. அதனால் அவை சித்திரவதையைத் தடுக்கவோ அது தொடர்பாக முறையிடவோ எந்த விதமான ஒழுங்குகளையும் கொண்டிருக்கவில்லை. தற்போதுள்ள நிலையில், தடுத்து வைக்கப்படுபவர்கள் சித்திரவதை செய்யப்படுவதாக நீதிபதிக்கு முறையிடும் சந்தர்ப்பத்தில், அவர்கள் அதே இடத்தில் தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டால் மேலும் அதிக சித்திரவதைக்கு உள்ளாகும் அபாயத்தில் இருக்கிறார்கள் உச்ச நீதிமன்றத் தீர்மானம் கூட இது அரசியலமைப்புச் சட்டப் பாதுகாப்புகளுக்கு முரணான ஒரு கவலைக்குரிய விடயமாகக் குறிப்பிடுகிறது.

தடுப்புக்காவலில் வைப்பதற்கு வழங்கப்படும் உத்தரவின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதியை இலங்கை மனித உரிமைச் சபைக்கு காட்டுவதென்பது ஒரு வகையில் தடுப்புக்காவலில் வைக்கப்படுபவரை பாதுகாக்கிறது என்று இந்த திருத்தங்கள் காட்ட முற்படுகின்றன. இலங்கை மனித உரிமைச் சபையின் உருவாக்கமானது சட்ட அதிகாரிகள் PTA இன் கீழ் மேற்கொள்ளும் கைதுகளையும் இடமாற்றத்தையும் அறிவிக்கும் ஒரு பொறிமுறையை ஏற்கனவே வழங்கியுள்ளது. ஆனால், இது சித்திரவதையையோ இழிவாக நடத்தப்படுவதையோ தடுப்பதற்கு போதுமானதல்ல என்று சர்வதேச மன்னிப்புச்சபை பல்வேறு சந்தர்ப்பங்களில் அவதானித்து உள்ளது.

தடுப்புக்காவலில் இருப்பவர்கள் தங்குதடையின்றிஅவர்களதுசட்டத்தரணிகளையும்குடும்பத்தினரையும் சந்திக்கலாம் என்று இந்த திருத்தங்கள் காட்ட முயல்கின்றன. ஆனால், முன்னெச்சரிக்கையாக தடுத்து வைக்கப்படுபவர்களுக்கு இவ்வாறான உரிய செயல்முறைகளுக்கு நடைமுறையில் வழிகள் இல்லை. அவர்களின் வழக்கு விசாரணைக்கு வரும் பொழுது மட்டுமே சட்டத்தரணிகளை சந்திக்கும் வசதி அவர்களுக்கு கிடைக்கலாம். மேலும் 'சந்தேகநபர்கள்' தமது சொந்த ஊர்களிலிருந்து தூர இடங்களில் தடுத்து வைக்கப்படுவதால் அவர்களின் குடும்பத்தினர் அவர்களை சந்திப்பதற்கான வழிகள் அரிதாகவே காணப்படுகின்றன. மேலும் தடுப்புக்காவல் நிலையங்களுக்கு செல்வதற்காக குடும்பத்தினர் பெருமளவு பொருளாதார சுமைகளுக்கு ஆளாகிறார்கள். இதனை சர்வதேச மன்னிப்புச் சபை அவதானித்துள்ளது.

வழக்கு விசாரணை தொடர்ச்சியான நாட்களில் நடத்தப்படும் இந்த திருத்தங்கள் என்று சொல்கின்றன. ஆனால், இது ஒரு சந்தேகநபர் தடுப்புக்காவலில் இருக்கும் காலத்தைக் குறைக்கும் என்று அர்த்தப்படாது. ஏனெனில் வழக்கு விசாரணைக்கு முன்னதாக தடுப்புக்காவலில் வைக்கப்படும் காலத்தை குறைக்க இந்த திருத்தங்களில் இடமில்லை.

PTA இன் பத்திரிகைகளை தடைசெய்யும் 14 ஆம் சட்டமூலத்தை நீக்குவதற்கு திருத்தங்களில் பிரேரிக்கப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கது.

நிமிர்வு ஊடகத்தின் அரசியல், சமூகம், பொருளாதாரம் சார்ந்த காணொளிகளை
www.youtube/nimirvu
என்ற youtube பக்கத்திலும்
www.facebook.com/nimirvu
என்ற முகநூல் பக்கத்திலும்
www.nimirvu.org
என்ற இணையத்தளத்திலும்
காணலாம்.

**நிமிர்வு இதழ் தொடர்பிலான தங்களின் காத்திரமான விமர்சனங்களையும், ஆலோசனைகளையும் எங்களுக்கு எழுதி அனுப்பலாம். மேலும், வேறெங்கும் பிரசுரமாகாத தங்களின் அரசியல், சமூகம், பொருளாதாரம், பண்பாடு சார்ந்த கட்டுரைகளையும் அனுப்பி வைக்கலாம். தரமானவை பிரசுரிக்கப்படும்.**
nimirvueditor@gmail.com

# பயங்கரவாதத் தடுப்புச் சட்டத் திருத்தம் பற்றி

**சர்வதேச மன்னிப்பு சபை, பங்குனி 18, 2022 – தமிழாக்கம் : நிமிர்வு**

27 தை 2022 அன்று, பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் (PTA) தான் ஏற்படுத்த இருக்கும் திருத்தங்களை இலங்கை அரசாங்கம் வர்த்தமானியில் வெளியிட்டது. முன்மொழியப்பட்ட திருத்தங்கள் பற்றிய சர்வதேச மன்னிப் புச் சபையின் பகுப்பாய்வு பற்றி இந்த கட்டுரை பேசுகிறது. இத்திருத்தங்கள் எவ்வாறு இச்சட்டத்தில் உள்ள முக்கியமான குறைபாடுகளை நிவர்த்தி செய்யத் தவறுகின்றன என்பது எமது ஆய்வில் தெரியவந்துள்ளது.

**அவற்றில் சில கீழே பட்டியலிடப்பட்டுள்ளன.**

சர்வதேச சட்டம் மற்றும் தரநிலைகளுக்கு இணங்க, இச்சட்டம் இலங்கை அரசியலமைப் பிற்கு எதிரானது என இலங்கை உச்ச நீதிமன்ற த்தால் ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டுள்ளது. அத்தீர்மானத்தையும் தாண்டி கணிசமான திருத்தம் இந்த மசோதாவுக்கு தேவைப்படு கிறது. இந்தச் சட்டம் நீக்கப்பட வேண்டும். இலங்கை அரசாங்கம் உடனடியாக இடைக்கா லமாகவேனும் இச்சட்டத்தைப் பயன்படுத்துவதை நிறுத்த வேண்டும்.

“பயங்கரவாதம்” என்று கருதப்படும் குற்றங்கள் தற்போதைய சட்டத்தில் தெளிவாக வரையறு க்கப் படவில்லை. இந்த தெளிவற்ற மற்றும் பரந்த அளவில் எல்லாக் குற்றங்களையும் உள்ளடக்குமாறு இந்தச் சட்டம் எழுதப்பட்டுள்ளது. இது சிறுபான்மையினர், அரசை விமர்சிப்பவர்கள் மற்றும் பத்திரிகையாளர்களை குறிவைக்க மீண்டும் மீண்டும் பயன்படுத்தப்படுகின்றது. இந்த திருத்தங்கள் அதில் எந்த மாற்றத்தையும் ஏற்படு த்தாது.

ஒப்புதல் வாக்குமூலங்களை ஆதாரமாக ஏற்றுக் கொள்ள PTA அனுமதிக்கிறது. PTA இன் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் சித்திரவதை செய்யப்படுவதற்கான முக்கிய காரணம் இது. சித்திரவதை அல்லது கொடூரமான, மனிதாபி மானமற்ற அல்லது இழிவான முறையில் நடத்தப் படாமல் இருப்பதற்கான உரிமை சித்திரவதைக்கு எதிரான சர்வதேச உடன்படிக்கையின் கீழ் ஒவ் வொருவருக்கும் உத்தரவாதம் அளிக்க ப்பட்டுள்ளது. சித்திரவதை சர்வதேச சட்டத்தின் கீழ் முற்றிலும் தடைசெய்யப்பட்டுள்ளது. ஒப்பு தல் வாக்குமூலங்களை ஆதாரமாக ஏற்றுக் கொள்வதை இந்த திருத்தங்கள் மாற்றவில்லை.

PTA தன்னிச்சையான கைதுகள் மற்றும் நீதி விசாரணயின்றி நீண்ட கால காவலில் வைக்க ப்படுவதை அனுமதிக்கிறது. ICCPR இன் ௯ (1) வது பிரிவு, நபரின் சுதந்திரம் மற்றும் பாதுகாப்பி ற்கான உரிமையை உறுதி செய்கிறது. இலங்கை அரசும் இதில் கையெழுத்து இட்டுள்ளது. அதில், ‘யாரும் எழுந்தமானமாக கைது அல்லது காவலில் வைக்கப்பட மாட்டார்கள். சட்டத்தால் நிறுவப்பட்ட நடைமுறைக்கு மாறாக யாருடைய சுதந்திரத்தையும் பறிக்க முடியாது.’ என்று சொல்லப்பட்டுள்ளது.

ICCPR இன் பிரிவு ௯ (2) இன் கீழ் உத்தர வாதப்படுத்தப்பட்டபடி கைது செய்யப்படும் போது ஒரு சந்தேக நபரைக் கைது செய்வதற்கான காரணங்களைத் தெரிவிக்க வேண்டும். ஆனால் சட்டஅமுலாக்கஅதிகாரிகளுக்குPTA இவ்வாறான அறிவுறுத்தல் எதனையும் விதிக்கவில்லை.

திருத்தங்கள் ஒரு சந்தேகநபரை குற்றச்சாட்டு எதுவுமின்றி ஒரு வருடம் வரை தடுத்துவைக்க அனுமதி அளிக்கின்றன. இது ICCPR உட்பட சர்வதேச மனித உரிமைகள் சட்டத்துக்கும் சர்வ தேச தரங்களுக்கும் எதிரானதாகும். இந்தச் சட்டங்களுக்கு இலங்கை அரசும் உட்பட்டது என்பது கவனிக்கத் தக்கது.

ஒருவர் சித்திரவதைக்கு உட்பட்டிருப்பதாக நீதி பதி கருதும் சந்தர்ப்பத்தில்கூட அவரை மருத்துவ பரிசோதனைக்காக ஒரு சட்ட மருத்துவ அதிகாரி யிடம் காட்ட அந்த நீதிபதி கட்டாயமாக உத்தரவிட வேண்டும் என்று இந்த திருத்தங்கள் சொல்ல வில்லை. இந்த திருத்தம் ‘நீதிபதி உத்தரவிடலாம்’ என்று சொல்கிறதே தவிர ‘நீதிபதி உத்தரவிட வேண்டும்’ என்று சொல்லவில்லை.

(23 ஆம் பக்கம் பார்க்கவும்)

இந்த இதழானது தமிழ் ஊடகத் திரட்டு நிறுவனத்தினரால் 27.03.2022 அன்று வெளியிடப்பட்டது